# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

தினக்கதிர்



உங்களின் சகல விதமான அச்சுத்தேவைகளுக்கும் இன்றே நாடுங்கள்

ஈஸ்ரன் கிராபிக்ஸ்

230, திருமலை வீதி, மட்டக்களப்பு.

☎24821



ஒளி - 01 - கதிர் - 208 | 08-11-2000 | புதன்கிழமை | பக்கங்கள் - 08 | விலை - ரூபா 5/-


## திருப்பெருந்துறையில் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு திருப்பெருந்துறையில் வைத்து குடும்பஸ்தரான கிட்டு என்றழைக்கப்படும் நமசிவாயம் சிவானந்தன்(29)நேற்று இரவு 8.15மணியளவில் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சாரதி பயிற்றுனராக தொழில் புரியும் காலஞ் சென்ற சிவானந்தன் மகிழூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.சம்பவம் இடம் பெற்ற நேரம் மோட்டர் சைக்கிள் ஒன்றில் வீட்டுக் சென்று வீட்டு வாசலைத் திறந்த போது கழுத்திலும் நெஞ்சிலும் சூடு விழுந்துள்ளது.

துப்பாக்கி சூட்டுடன் வீட்டிற்கு ஓடிச் சென்று விழுந்ததாக இவரது மனைவி தெரிவித்துள்ளார்.

காலம் சென்ற இவர் 85ம் ஆண்டிலிருந்து 90ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஈரோஸ் இயக்க உறுப்பினராக செயற்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டு மாவட்ட கூட்டணி எம்.பி நிமலன் மாஸ்டர் சுட்டுக்கொலை !

**மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதன்மைப் பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் மாஸ்டர் என அழைக்கப்படும் நிமலநாயகம் சவுந்தரநாயகம் (50) நேற்று செவ்வாய்க் கிழமை மாலை 6மணியளவில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். என்ற துயரச்செய்தியை ''தினக்கதிர்'' மிகவும் ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக்கொள்கிறது.**

மட்டக்களப்பு நகரில் இருந்து திருமலை வீதியூடாக மெய்பாதுகாப்பாளர் எவருமின்றி



மாஸ்டர் நிமலன் சவுந்தரநாயகம்

தனது நண்பருடன் வாழைச்சேனையிலுள்ள தனது வீட்டிற்கு செல்லும் போது விடுவிக்கப்பட்ட பிரதேசமான கிரானில் வைத்து இனம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவருடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த எஸ்.யோகராஜன் என்பவரும் காயமடைந்து மட்டக் களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### துப்பாக்கி சூடு கேட்டு இராணுவத்தினர் வந்தனர்

சம்பவம் நடைபெற்றதைத் தொடர்ந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் வீதிக் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் ஸ்தலத்திற்கு விரைந்து குற்றுயிராகக் கிடந்த நிமலன் எம்.பி மற்றும் காயமடைந்த யோகராஜனையும் வாகனம் ஒன்றில் ஏற்றி ஏறாவூர் வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர்.

தற்போது நிமலன் எம்.பி யின் சடலம் ஏறாவூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் பொலசார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### மூன்று வருடங்கள் சிறையில் இருந்தவர்

காலம்சென்ற பாராளுமன்ற உறுப்பினரான நிமலன் சவுந்தரநாயகம் ஆசிரியராக தொழில்புரிந்தபோது கடந்த 84ம்ஆண்டு ஏறாவூர் தமிழ் வித்தியாலயத்தில் படிப்பித்துக் கொண்டிருந்த சமயம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மூன்று வருடங்கள் சிறையில் இருந்தார். பின்னர் கடந்த 1994ம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு மிகக் குறைந்த வாக்குகளால் தோல்வியடைந்தார். எனினும் மட்டக்களப்பு மக்களிடையே பல்வேறு சமூக சேவைகளையும் செய்து மக்கள் தொண்டனாக செயற்பட்டார் இவர்.

### முதன்மை பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு!

11வது பாராளுமன்ற தேர்தலில் கல்குடா தொகுதியை பிரதிநிதிப்படுத்தும் வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டார். இத் தேர்தலில் 16452 விருப்பு வாக்குகளைப் பெற்று தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பின ராக தெரிவு செய்யப்பட்டார்.

கல்குடாத் தொகுதியிலேயே 13402 அதிகப்படியான விருப்பு வாக்குகள் கிடைத்தன. ஏனைய தொகுதிகளான மட்டக்களப்பு 2577 வாக்குகளையும் பட்டிருப்புத் தொகுதியில் 242 வாக்குகளையும் பெற்றுக் கொண்டார்.

### நேற்று முன்தினம் பிறந்த நாள்

இவர் தனது ஐம்பதாவது பிறந்த நாளை நேற்று முன்தினம் தமது இல்லத்தில் மிக அமைதியாக கொண்டாடினார்.

முறக்கொட்டான் சேனையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் வாழைச்சேனையில் திருமணம் செய்ததைத் தொடர்ந்து வாழைச்சேனையில் வசித்து வருகிறார். இவரது மனைவியான ஜெயரஞ்சினி(42) விஞ்ஞான ஆசிரியராவார். இவர் புதுக்குடியிருப்புவாணி வித்தியாலயத்தில் , கற்பித்துவருகிறார் .இவர்களுக்கு குழந்தைகள் இல்ல்லஎன்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழ் மக்கள் அதிர்ச்சி!

மட்டக்களப்புமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்நிமலன் சவுந்தரநாயகம் சுட்டுக் கொல்லப்பட்ட துயரச் செய்தி மின்னல் வேகத்தில் பரவியதைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் பெரும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்துள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப் போராட்ட வீரர் சீ.சுப்பிரமணியம் காலமானார்

(சென்னை)

இந்திய விடுதலைப் போராட்ட வீரரும் முன்னாள் மகாராஷ்ட்டிர மாநில முதல்வரும் சிறந்த கல்விமானும் தமிழ்நாட்டின் ராஜாஜி,காமராஜர் அமைச்சரவைகளிலும் லால்பஹதூர் சாஸ்திரி இந்திராகாந்தி அமைச்சரவை யிலும் அமைச்சராக பதவி வகித்த மூத்த அரசியல் தலைவர் சீ.சுப்பிரமணியம் தமது 90வது வயதில் நேற்று காலமானார்.

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

## சமுர்த்தி ஊக்குவிப்பாளர் 28 பேர் கிராமசேவகராக நியமனம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மாதம் ஆளும் கட்சி சார்பில் நியமிக்கப்பட்ட சமுர்த்தி ஊக்குவிப்பாளர் 28 பேரையும் கிராம உத்தியோகத்தராக பதவி மாற்றம் செய்ய பொது நிர்வாக அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இவர்களுக்கு மாவட்ட செயலகங்களில் 3 வாரம் பயிற்சி அளிக்கப்பட்டு கிராம உத்தியோகத்தர் வெற்றிடம் உள்ள இடங்களுக்கு நியமிக்க பொது நிர்வாக் அமைச்சு தீர்மானித்துள்ளது.

பகிரங்க முன் அறிவித்தல் விடப்படாது போட்டிப் பரீட்சை நடாத்தப்படாது அரசியல் வாதிகளின் சிபாரிசில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

## ஒட்டு சுட்டானில் எலும்புக்கூடு மீட்பு

(வன்னி நிருபர்)

ஒட்டுசுட்டான் பகுதியில் மனித எலும்புக்கூடு, வெடிபொருட்கள் கண்டெடுக்கப்படடுள்ளன.

ஒட்டுசுட்டான் பகுதியில் வெடிபொருட்களை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள வெண்புறா மிதிவெடி-கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மனித எலும்புக்கூடு ஒன்றைக் கண்டெடுத்துள்ளனர் என வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒட்டுசுட்டான் நகரப் பகுதியில் வெடிபொருட்களை அகற்றும் போது, அங்கு முத்தையன்கட்டு பலநோக்கு கூட்டுறவுச்சங்க வளாகத்தினுள் எலும்புக் கூடு ஒன்றை அவர்கள் கண்டெடுத்துள்ளனர். 1998 இல் ரிவிபல நடவடிக்கை மூலம் ஒட்டுசுட்டான் பகுதி சிறிலங்கா இராணுவம் கைப்பற்றியது. பின்னர் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் விடுதலைப் புலிகள் ஓயாத அலைகள்-3 நடவடிக்கை மூலம் கைப்பற்றினர்.

இதேவேளை ஒட்டுசுட்டானில் கூட்டுறவு சங்க வளாகத்துள் 110 மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. 6 லீற்றர் கொள்ளவு கொண்ட வெடிமருந்து நிரப்பப்பட்ட இரு கொள்கலன்கள் பொறிவெடிகள் 3, கைக்குண்டுகள் 3, 60 மில்லிமீற்றர் எறிகணைகள் 2, ஆர்பிஜி எறிகணைகள் 2, என்பனவும் வெண்புறா வெடிபொருள் அகற்றும் பிரிவினரால் எடுக்கப்பட்டுள்ளன. 29ஆம் திகதி முதல் இப்பணி இப்பகுதியில் நடைபெற்று வீருகின்றது என மேலும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அரசுக்கெதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர ஐ.தே.கட்சி தீர்மானம்

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு மட்டுமே இந்த பாராளுமன்றம் கூட்டப்படுகிறது.இதன் காரணமாக அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சி ஆலோசனை செய்து வருவதாக பதுளை மாவட்ட ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லொக்கு வண்டார நேற்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடி ஆலோசித்து

(8ம் பக்கம் பார்க்க)

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk


## எங்கே மனிதாபிமானம்?

! நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அமைதித் தீர்வு காணப்பட வேண்டுமா? என்பது பற்றி தென்னிலங்கையில் சர்ச்சை எழுந்திருக்கும் அதேசமயம் சொந்த மண்ணிலேயே வீடுவாசல்கள், சொத்து சுகங்களை இழந்து அகதிகளாகி அநாதைகளாய் அந்தரித்து நிற்கும் யாழ்ப்பாணக் குடா நாட்டு மக்களுக்கு எப்படி ஆறுதலளிப்பது என்ற பரிதாபம்.

குடா நாட்டில் அதிகரித்து வரும் அகதிகள் பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக வெளிநாட்டு மனிதாபிமான அமைப்புக்களுடன் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் நாளை சந்தித்துப் பேசவிருக்கிறார்.

தென்மாரட்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வலிகாமத்தின் பல்வேறு பகுதிகளிலும் தஞ்சமடைந்துள்ள மூவாயிரம் குடும்பங்களுக்கு குடியிருப்புக்களை அமைத்துக் கொடுப்பது குறித்தே முதலில் இப் பேச்சுக்களில் கவனம் செலுத்தப்படுமாம்.

குண்டு வீச்சுக்களிலும் எறிகணை வீச்சுக்களிலும் பாதிக்கப்பட்டு இருக்கவும், இடமின்றி உண்ணவும் வழியின்றி அல்லல்படும் இம்மக்களைப் பற்றி உள் நாட்டிலுள்ள மனிதாபிமான அமைப்புக்களோ அரசாங்கமோ அதிக அக்கறை கொள்ளாத நிலையில் தான் வெளிநாட்டு மனிதாபிமான அமைப்புக்களின் உதவியை நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதோ!

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் நிராயுதபாணிகளான தமிழ் இளைஞர்கள் குத்திக் குதறிக் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டதைக் கூட காருண்யசீலர்களாக இருக்க வேண்டிய பௌத்த மகா சங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையென்றால் இலங்கையில் மனிதாபிமானம் என்ன நிலையில் இருக்கிறதென்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இலங்கைப் போரில் போராளிகளான விடுதலைப் புலிகளின் கை ஓங்கி படையினர் அவர்களிடம் சிக்கிக் கொண்ட நிலையில் அவர்களுக்கு மனிதாபிமமான உதவியளிக்க முன்வந்து அந்தப் படையினரை இந்தியாவுக்குக் கொண்டு சென்று கொழும்புக்கு அனுப்பி வைக்க மனிதாபிமானத்துடன் உதவி செய்ய முன்வந்த இந்தியா இலங்கையிலிருந்து உயிர்தப்பி இந்தியாவில் தஞ்சம் கோரிச் செல்லும் அகதிகளையே இந்தியக் கரையிலிருந்து காப்பாற்ற முன்வரவில்லை.

உண்ண உணவும் இருக்க இடமும் இல்லாமல் சொந்த மண்ணிலேயே போரினால் அகதிகளாக அநாதைகளாக அந்தரிக்கும் தமிழ் மக்களுக்கு உதவ வேண்டுமென்ற மனப்பான்மையும் மனிதாபிமானமும் இல்லாமல் போனது பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தமிழர்கள் என்பதால்தானோ?

தமிழ் நாட்டில் சில வருடங்களுக்கு முன் இலங்கைத் தமிழர்களின் இன்னல் தீர்க்க திரட்டிய நிதியும் மற்றும் பொருள் பொருள்களும் தானம் செய்யப்பட்ட இரத்தமும் கூட இலங்கைக்குள் வரக் கூடாது என்று இலங்கை அரசு தடை போட்ட போது கூட இந்தியாவின் மனிதாபிமானம் கசியவில்லை.

இலங்கை அரசுக்கும் இலங்கை மக்களுக்கும் " பயங்கர வாதிகள்" பற்றி எச்சரிக்கையும் ஆலோசனையும் சொல்லும் " இந்து " பத்திரிகைக்கும் கூட தமிழ் அகதிகள் தமது சொந்த மண்ணில் படும் அவலமும் அல்லலும் கண்ணுக்குத் தெரியவில்லை.

இந்த மக்களின் உடன் பிறப்புக்கள் வெளிநாடுகளிலிருந்து அல்லல்படும் தமது மக்களுக்கு உதவுவதற்கு முன் வந்தால் கூட " விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டுகிறார்கள் " என்று கொழும்பிலுள்ள பேரின வாத ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் முத்திரை குத்தி பிரசாரம் செய்கின்றன.

இந்தப் பிரச்சாரத்தைத் தூக்கிக் கொண்டு கதிர்காமர் வெளிநாட்டுக்கு பறந்து சென்று உதவி வருவதையும் தடுக்க முன் நிற்பார்.

இப்பொழுது இலங்கையில் மழைக்காலம் தொடங்கிவிட்டது. கொட்டும் மழை, நடுங்கும் குளிர், நுளம்பு, இலையான், புழு, பூச்சி, பாம்பு ஏன்று பல தொல்லைகள்.

தொற்றுநோய் மற்றொரு புறம், உணவுத்தட்டுப்பாட்டுடன் நோய்களைச் சமாளிப்பதற்கு தேவையான மருந்துகளுக்கும் தட்டுப் பாடு.

இந்நிலையில் எறிகணைகளுக்கும் குண்டுவீச்சுக்களுக்கும் வளைந்து நெளிந்து ஓடி ஒழிந்து உயிரைக் காப்பாற்ற வேண்டும்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் முயற்சி மேற் கொள்ளப்படுமா? இந்த முயற்சி யின் முதற் கட்டமாக போர் நிறுத்தம் ஏற்படுமா? சில காலத்துக்காவது நிம்மதிப் பெருமூச்சு விட முடியுமா? என்பது தான் தமிழ் மக்களின் அங்கலாய்ப்பு.

போர் நிறுத்தமும் இல்லை. சமாதானப் பேச்சும் இல்லை. போர் மூலம் விடுதலைப் புலிகளை அழித்து ஒழித்தே நாட்டில் அமைதியைக் கொண்டு வருவோம் என்று இன ஒழிப்பையே அடிப்படைச் சிந்தனையாகக் கொண்டுள்ள பேரின வாதிகள் முழக்கமிடுகின்றனர்.

இந்நிலையில் மனிதாபிமானமுள்ள " மனிதாபிமான அமைப்புக்களின் பிரதிநிதிகளை " அழைத்து அவர்களின் உதவியை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டுள்ள யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் சண்முகநாதனை பாராட்ட வேண்டும்..

பேரினவாதிகளும் ,அரசும் இந்த முயற்சிக்கு இடையூறு செய்யாமலிருக்கவும் வேண்டும். அரச அதிபரின் முயற்சி வெற்றி பெற வாழ்த்துவோம். இறைவனை வேண்டுவோம்.

# அவசரகாலச் சட்ட நீடிப்பை எதிர்த்து வாக்களிப்பார்களா?

கடந்த பல வருடங்களாக வாடிக்கையான நிகழ்ச்சியாக அமைந்து விட்டது. அவசர காலச்சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிப்பது என்ற பிரேரனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதும் விவாதிப்பதும் நிறைவேற்றப்படுவதும் .

இலங்கையின் பதினோராவது பாராளுமன்றத்துக்குத் தேர்தல் நடை பெற்று முடிந்து பாராளுமன்றம் கூடி புதிய சபாநாயகரும் தெரிவு தெரிவு செய்யப்பட்டு விட்டனர். நாளை மீண்டும் பாராளுமன்றம் கூடவிருக்கிறது.

புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனமான ஜனாதிபதி உரையை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா நிகழ்த்துவார்.

இக் கூட்டத்தொடர் தொடங்கியதும் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரனை மீது ஆளும் கட்சியினரும் எதிர்க் கட்சியினரும் பேசுவார்கள்.

இம்முறை அவசரகாலச் சட்டத்தின் மீது காரசாரமான விவாதம் நடைபெறும் என்று எதிர்பார்க்கலாம். பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் நிராயுத பாணிகளான தமிழ் இளைஞர்கள் இருபத்தாறுக்கு மேற்பட்டோர் ஈவிரக்கமில்லாமல் வெட்டியும், குத்தியும், கொழுத்தியும், தீயிட்டும் படுகோரமாக படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இந்த விவாதத்தின் போது எதிர்க்கட்சியைச் சேர்ந்த தமிழ்ப் பேசும் பிரதிநிதிகளால் எடுத்துக் கூறப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

பிந்துனுவெவக் கோரக் கொலைகளைத் தொடர்ந்தும் மலை நாட்டில் துக்கத்தையும் துயரத்தையும் வெளிக்காட்டுவதற்கு மேற் கொண்ட கடையடைப்பு கடைக்குத் தீ வைப்பதிலும் அடித்து நொறுக்குவதிலும் . மலையக முன்னனியின் தலைவர் சந்திர சேகரன் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டதில் போய் முடிந்தது பற்றியும் மலை நாட்டில் ஏற்பட்ட அழிவுகள் உயிர்ப்பலி பற்றியும் பாராளுமன்றத்தில் எடுத்துச் சொல்லப்படும்.

இந்த விவாதத்தின் போது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் சில எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் தமிழ் அமைப்புக்கள் மீது பழியைப் போடுவதற்கும் காத்திருப்பார்கள்.

## எதிர்த்துப் பேசும் பிரதிநிதிகள்

இந்த விவகாரத்தில் தமிழ் பேசும் பிரதிநிதிகள் பங்கு பற்றிப் பேசுவார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள தமிழ் பேசும் பிரதிநிதிகள் பிந்துனுவெவப் படு கொலைகளைப் பற்றி எடுத்துச் சொல்லி இச்சம்பவத்துக்கு அரசாங்கமே பொறுப்பு என்றும் குற்றம் சுமத்துவார்கள்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த தமிழ் பேசும் பிரதிநிதிகளும் அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ் பேசும் பிரதிநிதிகளும் நிச்சயமாக இக் கொல்லைச் சம்பவத்தைக் கண்டித்தும் பேசுவார்கள். இப் படுகொலையில் மாண்டுபோனவர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு தாராளமாக வழங்க வேண்டுமென்றும் பிரதிநிதிகள் பலரும் எடுத்துச் சொல்வார்கள் என்றும் எதிர்பார்கலாம்.

அவசர காலச்சட்டத்தின் கீழ்தான் பாதுகாப்புச் சட்ட விதிகள், பயங்கரவாதத் தடைச் சட்ட விதிகள் நாசகாரத் தடுப்புச் சட்ட விதிகள் எனப்பல சட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன.

இந்தச் சட்டங்களின் கீழ் தான் இன்னமும் பலர் கைது செய்யப்பட்டு விசாரணை எதுவும் இன்றி சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இச் சட்ட விதிகளின் கீழ்தான் வெலிக்கடைச் சிறையில் துடித்து வைக்கப்பட்டவர்கள் 1983ல் கோரமாகக் கொலை செய்யப்பட்டனர். களுத்துறைச் சிறைச்சாலையில் நடந்த பலி எடுப்புக்களுக்கும் இந்தச் சட்ட விதிகளில் அவர்கள் அடைக்கப்பட்டிந்ததே காரணம்.

பாராளுமன்றத்தில் கடந்த மாதம் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிப்பதற்கான பிரேரனை மீது நடந்த விவாதத்திலும் இதற்கு முன் பழைய பாராளுமன்றக் கூட்டத்திலும் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரனை மீதான விவாதத்திலும் சரி பங்கு பற்றிய தமிழ் பேசும் பிரதிநிதிகள் இந்தச் சட்ட விதிகளின் கீழ் நடைபெறும் அட்டூழியங்களை விபரமாக எடுத்துக் கூறினர். எதிர்க் கட்சியினர் இந்த அநீதிகளை கடுமையாக விமர்சித்தனர்.

## அறிக்கை விடாதவர்கள் இல்லை

இவை மட்டுமல்ல பண்டாரவளைப் பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுபயங்கரக் கொலைகளைக் கண்டித்து பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்த தமிழ் பேசும் பிரதிநிதிகளே இல்லை என்று சொல்லலாம்.

இது மட்டுமா யாழ்ப்பாணத்தில் பண்டாரவளைப் படுகொலையைக் கண்டித்து அரசாங்கத்திற்கு ஆதரவாக நிற்கும் கட்சி கூட கட்டாயக் கடையடைப்பு நடத்தியது. ஆர்ப்பாட்டப் பேரணிகளும் நடைபெற்றன.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் பிரதிநிதிகளும் அரசாங்கத்தை ஆதரிக்கும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தமிழ்ப் பேசும் கட்சிகளும் பிரதிநிதிகளும் விடுத்த கண்டன அறிக்கைகள் அநேகம்.

கடந்த மாதம் நடந்த அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிக்கும் பிரேரனை மீது நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு தமது கருத்துக்களை தெரிவித்த பின்னர் பிரேரனை வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது அதை எதிர்த்து வாக்களித்தவர்களில் ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த நால்வரும் அடங்குவர்.

## எதிர்த்ததால் ஆயுதங்கள் போயின

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரனை மீதான வாக்கெடுப்பில் அரசாங்கத்தை ஆதரித்து வாக்களித்தவர்கள் தான் வெற்றி பெற்றார்கள்.

ஆனால் இதை எதிர்த்து வாக்களித்த ரெலோ இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் ஆயுதங்கள் இரண்டொரு தினங்களிலேயே பறிக்கப்பட்டு விட்டன.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரனையை எதிர்த்து வாக்களித்ததன் பயன் இதுதான் என்று ரெலோவைச் சேர்ந்தவர்கள் சொல்லிக்கொண்டார்கள். ஆனாலும் தாங்கள் கொள்கையை மாற்றிக் கொள்ளப்போவதில்லை என்று ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஜே.வி.பியும் கடந்த மாதம் அவசர காலச்சட்ட நீடிப்பை எதிர்த்து வாக்களித்திருந்தன.

ஆனால் கடந்த மாதமும் சரி பழைய பாராளுமன்றத்திலும் சரி அவசரகாலச் சட்டம் நீடிப்பதை எதிர்த்துப் பேசும் ஐக்கிய தேசியக் கட்சியினர் வாக்கெடுப்புச் சமயத்தில் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டு விடுவது வழக்கம்.

வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் விடுவதன் மூலம் அவசர காலச்சட்டம் நீடிப்பதற்கு அவர்கள் ஆதரவளிக்கின்றனர்.

இப்பொழுது அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிப்பதற்கு தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் என்ன செய்வார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் ரெலோ இயக்க உறுப்பினர்களும் நிச்சயம் எதிர்த்து வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். ஜே.வி.பி. எதிர்த்து வாக்களிக்குமென்று எதிர் பார்க்கலாம்.

ஆனால் பிந்துனுவெவ படுகொலையை மிக வன்மையாகக் கண்டித்த ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தமிழ் பேசும்

**எஸ்.எம்.ஜி**

பிரதிநிதிகள் கட்சி வழமை போல் முடிவு செய்தால் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருக்கப் போகிறார்களா? அல்லது மனச் சாட்சிக்கு விரோதமில்லாமல் அப்பாவிகளையும், நிராயுதபாணிகளையும் மிருகத்தனமாக பலி கொள்ளும் அவசரகாலச்சட்ட விதிகளை எதிர்த்து வாக்களிக்கப் போகிறார்களா?

இதே சமயம் பிந்துனுவெவ படுகொலைகளைக் காரசாரமமாகக் கண்டித்தும் அறிக்கைகள் விடுத்தும் கடையடைப்புக்கள் நடாத்தியும் அவற்றுக்கு ஆதரவு தெரிவித்தும் நடந்து கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னனியைச் சேர்ந்த பாராளுமன்றத் தமிழ் பேசும் பிரதிநிதிகளும் அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுக்கும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் பிரதிநிதிகளும் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளும் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரனையை எதிர்த்து வாக்களிப்பார்களா?

தமிழ் பேசும் பிரதிநிதிகள் அனைவரும் இப் பிரேரனையை எதிர்த்து வாக்களிக்க வேண்டுமென்று மட்டக்களப்பில் உதயமாகியுள்ள மறுமலர்ச்சிக் கழக தமிழ் பேசும் பிரதிநிதிகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே கடிதம் அனுப்பி கோரியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பண்டாரவளைப் படுகொலைக்கு கண்டனம் தெரிவித்து அறிக்கைகள் வெளியிட்டுக் கண்ணீர் வடித்ததும், கடையடைப்பு நடாத்தி ஒப்பாரி வைத்ததும் வெறும் கண் துடைப்புத்தானா? கொல்லப்பட்டவர்கள் போக இன்னமும் சிறைகளில் வாடுபவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கு அவசரகாலச் சட்ட விதிகளை அகற்றுவதற்கு வழி காண வேண்டாமா?

உண்மையும் உணர்வும் தெரிந்து கொள்ள வாய்ப்பு.

# அரபிய ஆடுகளை விடுவித்தால் இஸ்ரேலிய பசுக்களை விடுவிப்போம்

இஸ்ரேல் பசுவொன்று எல்லை தாண்டி லெபனானுக்குள் புகுந்ததையடுத்து நான்கு லெபனான் சிறுவர்கள் அதனை துரத்திப் பிடித்ததுடன் இஸ்ரேலுக்குள் நுளைந்த தமது ஆடுகளை திருப்பித் தரும் வரை பசுவைத் திருப்பித்தரப் போவதில்லை என்று கூறியுள்ளார்.

பசுவை நான்கு சிறுவர்களும் விரட்டிப் பிடித்ததாக சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் கூறினர். பசுவைக் கொண்டு செல்ல வந்த ஐக்கிய நாடுகள் சமாதானப் படையினரிடம் தொலைந்து போன ஆடுகளை மீண்டும் கையளித்தால் தான் பசுவை மீண்டும் தரமுடியும் என்று சிறுவர்கள் கூறியுள்ளனர்.

லெபனானின் ஹிஸ்புல்லாஹ் கெரிலாக்கள் கைதிகள் பரிமாற்றங்கள் மூலம் சிறுவர்கள் இந்த யோசனையை பெற்றிருக்கலாம் எனத் தெரிய வருகிறது. லெபனான் எல்லைப் பகுதிக்கு அருகில் நடமாடிய இஸ்ரேலிய படை வீரர்கள் மூவரையும் மற்றும் இராணுவ அதிகாரி ஒருவரையும் ஹிஸ்புல்லாஹ் கெரில்லாக்கள் சிறைபிடித்தனர். கடந்த மாதம் சிறைப்பிடிக்கப்பட்ட இவர்களை இஸ்ரேலிய் சிறைகளிலிருக்கும் அறபியர்களுக்குப் பதிலாக விடுவித்தால் விடுவிப்பதாக ஹிஸ்புல்லாஹ் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சவூதி விமானத்தைக் கடத்தியவர்களுக்கு ஈராக் அரசியல் புகலிடம்

(பாக்தாத்)

சவூதி அறபியாவுக்கு சொந்தமான விமானம் ஒன்றை இரு சவூதி கடத்திய அறபியர்களுக்கு ஈராக் அரசியல் புகலிடம் வழங்கியுள்ளது. இந்த விமானக் கடத்தலில் ஈடுபட்ட இருவரினதும் கோரிக்கையையும் அடுத்து இவர்களுக்கு அரசியல் புகலிடம வழங்கப்பட்டுள்ளதாக பக்தாத் அறிவித்துள்ளது.

தாங்கள் சவூதி அறபியாவின் சாதாரண மக்கள் என்றும் சவூதி அறபிய மக்களின் உரிமைகளை நிலை நிறுத்த முயல்வதாகவும் தெரிவித்துள்ளனர். கடத்தல் காரர்களை நாடுகடத்துமாறு சவூதி அறபியா ஈராக்கிடம் கேட்ட போதும் அதற்கு ஈராக் மறுத்துவிட்டதுடன் ஈராக்குக்கு எதிரான கொள்கையை சவூதி அறபியா மாற்றிக் கொள்ள முன் வருமானால் அது குறித்து மீள் பரிசீலனை செய்யப்படும் என்று ஈராக் தெரிவித்துள்ளது.

## சீனாவில் அதிகரிக்கும் பாலியல் நோய்

(பீஜியா)

சீனாவில் வேகமாகப் பரவி வரும் பாலியல் நோய் சீன மக்களுக்குப் பெரும் கவலையை அளித்துள்ளது.

எயிட்ஸ் நோய் மற்றும் பாலியல் நோய்களைக் கட்டுப் படுத்துவதற்கோ, இந்நோய் கண்டுள் ளவர்களுக்குச் சிகிச்சை அளிப் பதற்கோ போதிய மருத்துவர்க ளில்லை என்றும் புகார் கூறப்படு கிறது.

இப்பொழுது எட்டு லட்சம் பேர் சீனாவில் பாலியல் நோயால் பீடிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டாலும் இத் தொகை பத்து மடங்காக இருக்கலாமென்று உத்தியோகப் பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இந்தியாவின் 7 வருட விண்வெளி ஆய்வுகூடம் செயலிழப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் செயலிழந்த விண்வெளி ஆய்வுக் கூடமான எய்ன்ஸ்ருபியை கைவிட தீர்மானித்துள்ளதாக இந்திய விண்வெளி ஆய்வுக்கூட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை, இருதடவைகள் இந்த ஆய்வு கூடத்தின் செயற்பாடுகள் செயல் இழந்தமையினால் மற்றுமொரு விண்வெளி ஆய்வுக் கூடத்துக்கு அதன் செயற்பாடுகள் அனைத்தும் மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

7 வருடங்கள் விண் வெளியில் பணியாற்றிய இந்த ஆய்வு கூடம் பூமியுடனான தனது தொடர்பை கடந்த வெள்ளிக்கிழமையுடன் துண்டித்துக் கொண்டது. ஞாயிறு அன்று அது சீர் செய்யப்பட்ட போதும் அது மீண்டும் பழுதடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.



அபுல் ஹஸீம் 47

இவர் ஒரு பங்காளதேஸ் தொழிலாளி, ஆசனிக் நஞ்சால் தனது கையில் ஏற்பட்ட ஊனத்தைக் காட்டுகிறார். இவ்வாறான ஆசனிக் நஞ்சு தங்களது குடிநீரில் கலந்துள்ளதால் பாதுகாப்பான சுத்தமான குடிநீர் தங்களுக்கு வேண்டும் என இக் கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.

## பிலிப்பைன்ஸ் அதிபருக்கு நெருக்கடி

சூதாட்டக்காரர்களிடம் லஞ்சம் வாங்கியது தொடர்பாக அரசியல் அமைப்பு குற்றச்சாட்டை எதிர்நோக்கியுள்ள பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ஜோசப் யெஸ்ட்ரடாவின் நெருங்கிய அரசியல் சகா ஒருவர் ஆதரவை விலக்கிக் கொண்டதை தொடர்ந்து ஜனாதிபதி யெஸ்ரடா பெரும் இக்கட்டான நிலைக்கு உள்ளாகியுள்ளார்.

ஜனாதிபதியுடனான தொடர்பை தான் துண்டித்துக் கொள்வதாக செனட்டர் ரமோன் ரவினா அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

லஞ்ச ஊழல் விவகாரம் அம்பலத்துக்கு வந்ததை அடுத்து யெஸ்ரடாவின் மீதான ஆதரவை விலக்கிக் கொள்ளும் ஆறாவது செனட்டர் இதுவாகும்.

# உலக வலம்

தொகுப்பு :- பௌஸி



இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனியர்களுக்கும் மீண்டும் தொடங்கியுள்ள மோதலில் மாண்டவர்களுக்கு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சியொன்றில் மாண்டு போன தனது மகனின் புகைப்படமுள்ள ஒரு பிரசுரத்தைக் காண்பிக்கும் தாய்க்கு ஆறுதல் சொல்லித் தேற்றும் பாலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்தை படத்தில் காணலாம்

## அவுஸ்திரேலிய அமைச்சர் ராஜினாமா

(சிட்னி)

அவுஸ்திரேலிய போக்குவரத்து அமைச்சர் மைக்கல் சுமிட் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இஸ்ரேரியாவில் கடந்த 18 ம் திகதி நடைபெற்ற மாகாண தேர்தல்களில் அவரது கட்சிக்கு கிடைத்த தோல்வியை அடுத்து அரசின் மீது வெறுப்பு ஏற் பட்டதன் காரணமாகவே பதவியை ராஜினாமா செய்ததாக 55 வயதான சுமிட் கூறியுள்ளார். இவரது சுதந்திரக்கட்சி கடந்த பெப்ரவரி மாதம் கூட்டணியில் அங்கம் வகித்து அரசாங்கம் அமைத்திருந்தது.

## காஷ்மீரில் இராணுவம் பலி

(ஜம்மு)

இந்தியாவின் காஷ்மீர் மாநில விடுதலைப் போராளிகள் இராணுவ முகாம் ஒன்றின் மேல் முற்றுகை நடத்தியதில் மூன்று இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதுடன் மூன்று இராணுவ வீரர்கள் காயமுற்றனர்.

இந்த முற்றுகையின் போது கெரிலாக்கல் தரப்பிலும் இருவர் உயிரிழந்தனர்.

## இருபிரிவுகள் மோதி 11 பேர் பலி

(புதுடில்லி)

இந்திய உத்தரப் பிரதேசத்து மாநிலத்தில் இரு முஸ்லிம் பிரிவினர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல்களில் 11 பேர் கொல்லப் பட்டதுடன் 24 பேர் வரை காயமுற்றதாக மாநில செய்திகள் கூறுகின்றன.இதனையடுத்து மோதல்கள் இடம் பெற்ற இடங்களில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அகில இந்திய வானொலி நிலையம் அறிவித்துள்ளது

## பிரிட்டிஸ் இராணுவம் உஷார் நிலை

வடஅயர்லாந்து சமாதான நடவடிக்கைகளை ஐ.ஆர்.சி. போராட்டக்குழு எதிர்ப்பதாகை கிடைத்துள்ள புலனாய்வு தகவல்களையடுத்து பிரிட்டிஷ் இராணுவம் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பிரிட்டிஷ் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து நாம் மேலும் ஆலோசனை செய்யப்போவதில்லை. ஏன்.எனில் மக்களை காப்பாற்றுவது தொடர்பான எண்ணம் எப்போதும் எம்மனதில் இருந்து கொண்டேயுள்ளது என்றார்.

## அமெரிக்க மருத்துவ குழு இஸ்ரேல் மீது கண்டனம்

சர்வதேச சட்டங்களை அவமதிக்கும் வகையில் இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீனர்கள் மீது தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் அமெரிக்காவில் இயங்கிவரும் மருத்துவ குழு ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த 5 வாரங்களாக இஸ்ரேல் இராணுவம் நடத்திவரும் தாக்குதல்களினால் சுமார் 170 பாலஸ்தீனர்கள் பலியாகியுள்ளனர் என்று அந்த அமைப்பு மேலும் கூறியுள்ளது.

## கராச்சியில் குண்டு வெடித்து 2 பேர் பலி

(கராச்சி)

பாகிஸ்தானில் கராச்சி நகரில் நேற்று நடந்த குண்டு வெடிப்பில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர். மற்றும் பலர் காயமடைந்தனர்.

## 7 மாதமாக காணாமல் போயுள்ள அமைச்சர்

7 மாத காலமாக காணாமல் போயிருந்ததாக கூறப்படும் லாவோஸ் நாட்டு அமைச்சருக்கு நியூஸ்ஸிலாந்து அரசியல் புகலிடம் வழங்கியுள்ளது. கம்ஸோ அரசதுறைக்கான அமைச்சராவார். 57 வயதான இவர் மருத்துவ சிகிச்சைக்காக கடந்த ஏப்ரல் மாதம் ஐரோப்பா செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தாகவும் அன்று முதல் அவர் காணாமல் போயிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இவர் ஜேர்மனியிலிருந்து கடந்த ஓகஸ்ட் 15 ம் திகதி தாய்லாந்து சென்றிருந்ததாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

# சீன ஜனாதிபதியின் கம்போடிய விஜயத்தை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கை தீவிரம்

(நாம்பென்)

கம்போடியா பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. அடுத்த வாரம் சீன ஜனாதிபதி கம்போடியா விஜயம் செய்யப்போவதை அடுத்தே பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதே வேளை சீனா கம்யூருட்ச் தீவிரவாதிகளுக்கு கடந்த காலங்களில் ஆதரவு வழங்கியமைக்கு மன்னிப்புக் கோர வேண்டும் என்று சீன மாணவர்கள் கேட்டுள்ளனர்.

மேலும் இம்மாணவர்கள் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என்றும் சுமார் 6 ஆயிரம் பொலிஸார் மற்றும் படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.1975 தொடக்கம் 1979 வரையான காலப்பகுதியில் சீன ஆதரவுடனான கம்ருட்ச் தீவிரவாதிகளினால் பெரும் எண்ணிக்கையானோர் கொல்லப்பட்டமைக்கு மன்னிப்பு கோருவதுடன் நஷ்ட ஈடும் வழங்க வேண்டும் எனவும் மாணவர்கள் கோரியுள்ளனர்.

## திமிங்கலம் தாக்கி ஒருவர் பலி

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் கேர்ஸ் நகரில் நேற்று முன்தினம் நீச்சல் அடித்துக் கொண்டிருந்த ஒருவரை கொன்ற திமிங்கிலத்தைத்தேடி கண்ட இடத்தில் சுடும்மாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இடுப்பளவு நீரில் மேற்கூறிய நபர் நீச்சலடித்துக் கொண்டிருந்த சமயம் இந்த திமிங்கிலம் தாக்கியது.இதன் காரணமாக அந்த கடலின் 60 கிலோ மீற்றர் கடல் பிரதேசம் மூடப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் இரண்டு மாதத்துக்குள் மூன்று பேர் திமிங்கிலம் தாக்கி உயிரிழந்துள்ளார்கள்.

# பிறந்த திகதி தரும்யோகம்.

## ஜோதிடம் - யூலை-07

யூலை மாதம் 7,16,25,ம் தேதியில் பிறந்தவர்களின் பலன்:

எண் 7 அதிபதி கேது.

தங்களது அறிவாற்றலும், தன்னம் பிக்கையும், மற்றவர்களை ஆச்சரியப்பட வைக்கும். அறிவு ஆற்றல் மிக்கவர் என்ற பட்டமும் பெறுவீர்கள்.அழகை ஆராதிக்கும் பண்பு, கற்பனைத்திறன், செயலாற்றும்திறமை, அனுசரித்துப்போகும் குணம் உங்களை உயர்நிலைக்கே கொண்டு செல்லும்.

சித்திரம் வரைதல், வர்ணம் தீட்டுதல், எழுத்தாளர், இசை அமைப்பாளர், பாடகர், சிறந்த பேச்சாளர் இவைகளில் ஏதாவது ஒன்றில் தேர்ச்சியும், அதில் தொழிலும் அமைந்து புகழும் செல்வமும் பெறுவீர்கள்.

இளமைக்காலத்தில் செல்வநிலையில் சற்றுக் குறைபாடுடையவர்களே. பல் நூல்களை தினமும் படித்து அவைகளில் ஆராய்ச்சி செய்யும் குணமுடையவர்கள். ஆன்மீக சிந்தனைஅதிகம் கொண்டவர்கள். சிறந்த ஆன்மீக வாதிகளாகவும் சிலர் திகழ்வீர்கள். பொதுச் சேவையில் ஆர்வம் கொண்டவர்கள்.

எப்போது பார்த்தாலும் சிந்தனை,குழப்பம், உள்ளவர்களாகவே காட்சியளிப்பீர்கள். மற்றவர்களிடம்தயவு தாட்சண்யம் எதிர் பார்த்தல் சிறிது கூடப் பிடிக்காது. மற்றவர்களுக்கு தர்மம் செய்யும் குணமும் தாராளமாக பிறருக்கு உதவும் பண்பும் இவர்களுடன் பிறந்தவை.

எப்பொழுதும் பிரயாணம் செய்து கொண்டிருப்பதில் ஆர்வம் அதிகமாக இருக்கும். எதிர் நீச்சல் போடுவதில் மிகவும் சமர்த்தர். எதிர் காலத்தைப் பற்றி சிறிது கூட கவலைப்பட மாட்டீர்கள். அன்னிய மொழியில் தேர்ச்சி பெறுவீர்கள்.

குடும்ப வாழக்கையில் பாசப் பிணைப்புள்ளவர்கள். திருமணம்தாமதமாக நடைபெறுவதே நன்மை தரும். அதனால் திருமணவாழ்க்கை மகிழ்ச்சியான தாகவும் அமையும்.

அயல்நாட்டுக் காரர்களால் செல்வ நிலையில் உயர்வு, உயரும் நிலை ஏற்படும். குளிர்ச்சியான பானங்களைத் தவிர்க்க வேண்டும். மனம் மகிழ்ச்சியுடன் இருக்குமானால் எந்த வியாதியும் தொல்லை தராது.

மனம்தான் அனைத் துக்கும் காரணம். மகிழ்ச்சியுடன் இருக்கப் பழகுங்கள். வந்தால் வரட்டும். நம்மை என்ன செய்யும் என்று நினைத்தாலே வியாதியே உங்களை விட்டு அகன்று விடும். மனத்தைரியமே அனைத்திலும் உயர்வானது.

2,7,11,16,20,25,29, தேதிகள் எந்த ஆண்டு எந்த மாதமானாலும் நன்மை தரும்.

உங்கள் வாழ்க்கையில் 2-17-11-16-20-25-29-34-38-43-52-56-61-65-70 ம் வயதுகளில் பல சுப நிகழ்ச்சிகள் நடைபெறும்.

2-7-11-16-20-25-29 தேதிகளில் பிறந்தவர்களின் நட்பும், உறவும் பலமாக அமையும்.வாழ்க்கைத் துணையும், மகிழ்ச்சிகரமாகவே இருக்கும்.

வர்ணம்: பச்சை, வெள்ளை, மஞ்சளும் கலந்த மங்கலான நிறங்களும் மிகவும் யோகம் உண்டாக்கும். வெள்ளையே இவர்களது மனதை பெருவாக கவரும்.

இரத்தினம்: வைடூரியம் cats eye ஒரு அங்குலத்திற்கு 6500 நூல் போன்ற கோடுகள் காணப்படும். கடினத்தன்மை 8.5, ஒப்படர்த்தி 3.5, அலுமினியா 80.2, குளூசினா 19.8, இரும்பு, குரோமியா பெர்லியம் ஆக்ஸேடும் கலந்துள்ளன. வயிற்றுக் கோளாறுகள், பித்தம், சளி, போன்ற நோய்களை அகற்றி அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும்.

முத்து: சந்திரகாந்தக்கல் (moonstone) இவையும் நன்மையே.

வே .தவராசா

### ஆசிரியர் கௌரவிப்பும் மாணவர் பாராட்டும்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு கல்லடி முகத்துவாரம் விபுலானந்த வித்தியாலயத்தில் 9 ம் திகதி வியாழக்கிழமை ஆசிரியர் கௌரவிப்பும்தரம்5 புலமைப்பரிசில் மாணவர்களைப் பாராட்டும் வைபவமும் இடம் பெறவுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சையில்தகமைபெற்ற மாணவர்களைப் பாராட்டும் வைபவத்திற்கு அதிபர் வ. சொக்கலிங்கம் தலைமை தாங்குவார். வரவேற்புரையை சி. ஜயாத்துரை நிகழ்த்த, மேலதிக அரசாங்க அதிபர் வே. சண்முகம் அதிதியாகக் கலந்து சிறப்பிப்பர்.

இதற்கு அடுத்ததாக ஆசிரியர் கௌரவிப்பு இடம் பெறும். மட்/தேசிய கல்விப் பணிப்பாளர் எஸ். சரவணபவான், மட்/ தேசிய கல்விக் கல்லூரி உதவி பீடாதிபதி எஸ். பாக்கியராஜாஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொள்வார்கள்.

### 40 கோடி செலவில் தேசிய கல்வியியல் கல்லூரி

(களுவாஞ்சிக்குடி நிருபர்)

கிழக்கு மாகாணத் திற்கான தேசிய கல்வியியல் கல்லூரி தளவ்குடாவில் 40 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட இருப்பதாக, இன விவகார, தேசிய நல்லிணக்க பிரதியமைச்சர் எஸ். கணேசமூர்த்தி தெரிவித்தார். முதற்கட்டமாக 16 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதாகவும். இம்மாத இறுதியில் இக்கல்லூரிக்கான அடிக்கல்லை கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த நாட்டி வைப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### காலியில் கரையொதுங்கிய திமிங்கிலம்

(காலி)

காலியில் மகா இந்துருவ என்ற பகுதியில் கடலில் அடித்து வரப்பட்ட திமிங்கிலம் ஒன்று உயிருடன் ஒதுங்கியுள்ளது.

இத்திமிங்கிலத்தின் வால் பகுதியில் காயங்கள் காணப்படுவதாகவும் கப்பலுடன் தாக்குதலுக்குள்ளானதாக தாங்கிக் காயங்கள் ஏற்பட்டிருக்கலாமென்றும் பொலிசார் தெரிவித்தனர். இன்னும் அது மூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறது அதைக் கவனிப்பதற்கு நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம் என்றும் அந்தப் பொலிஸ் அதிகாரி சொன்னார். வைத்தியக்குழுவொன்று திமிங்கிலத்தைப் பரிசீலிக்கச் சென்றுள்ளது.

# செய்திச்சுருக்கம்

**நம்பிக்கையில்லாப் பிரேரணை**

அமைச்சர்களின் நியமனம் உட்பட அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மக்களுக்கு பாதகமாகவேயுள்ளது. எனவேஅரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டுவர ஐ.தே.க.திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**இராணுவம் வாபஸ் பெறாது**

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த 29 ஆம் திகதி அசம்பாவிதங்களை தொடர்ந்து தற்போது சுமூகநிலை நிலவுகின்றது.அங்கு பாதுகாப்புக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள இராணுவத்தினரை வாபஸ் பெறுவதற்கு பிரதமர் மறுப்பு தெரிவித்துள்ளமை வீண் பிடிவாதமாகும் என்று தேசிய தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எஸ் அருள்சாமி தெரிவித்துள்ளார்.

**மதம் பிடித்த யானை**

திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி ஆலய உற்சவ ஊர்வத்தில் கலந்து கொண்ட யனையொன்று திடீர் என மதம் பிடித்து ஓட ஆரம்பித்ததோடு திருவானந்தபுரம் விமான நிலையத்தினுள்ளும் புகுந்து பெரும் அட்டகாசம் புரிந்துள்ளது..

**பிரபாவுடன் நாமும் பேச வேண்டும்**

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் பேசமல் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதில் முஸ்லிம்காங்கிரஸின் திட்டவட்டமான உண்மையாகும். நோர்வேயின் இந்த முயற்சியைப் பாராட்டுகிறோம். அதேவேளை விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் நோர்வேசந்தர்ப்பத்தை உருவாக்கித்தரவேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் பா.உ.யூ.எல். எம்.ஹனிபா-மருதூர்க்கனி நோர்வே சமாதான தலைவர்-பிரபாகரன் சந்திப்புதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**பலநாள் திட்டமிடல்:-**

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம் பெற்று வந்த பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் போழைக் கண்ணன் என அழைக்கப்பட்ட பிரபலம்மிக்க கேடி ஒருவர் பொது மக்களால் கொடுக்கப்பட்ட தகவளைத்தொடர்ந்து வட்டுக் கோட்டையில்வைத்து பொலிஸாரினால் சுற்றி வளைக்கப்பட்டு பிடிக்கப்பட்டார்.

**ஷெல் தாக்குதல்:-**

வாழைச்சேனை சுங்காண் கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஷெல் தாக்குதலில் இரு யுவதிகள் படுகாயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**அகதிகள் குறித்து பேச்சு:-**

யாழ் குடாநாட்டில் அதிகரித்து வரும் அகதிகள் பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக வெளிநாட்டு மனிதாபிமான அமைப்புக்களுடன் யாழ் அரசாங்க அதிபர் பேச்சுக்கள் நடாத்தவுள்ளார்.

நாளை 9ம் திகதி முதல் 14ம் திகதி வரை இந்த மனிதாபிமான அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் சந்திப்பு நடைபெறுமென அரச அதிபர் கே. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

**நோர்வே போகமாட்டார்:-**

நோர்வே செல்லும் ஐந்து எம்.பிக்கள் அடங்கிய குழுவில் நால்வர் ஆளும் பொது ஜன ஐக்கிய முன்னணியையும், ஒருவர் ஜே.வி.பியையும் சேர்ந்தவர். அரசு புலிகளுக்கிடையிலான நோர்வே மீண்டும் ஆரம்பித்த பேச்சை தொடர்ந்து இதற்கு கடும் எதிர்ப்பினை தெரிவித்து ஜே.வி.பி.தனதுகலந்து கொள்ளலை விலக்கி கொண்டுள்ளது.

**சிங்கங்களின் கூண்டுக்குள்ளே:-**

மிருகங்கள் மீது அன்பு செலுத்துவதால் தனது உயிரை மிருகங்களுக்கே அர்ப்பணிக்கப் போவதாக கடிதம் ஒன்றை எழுதி வைத்து விட்டு சரத் ராஜ கருண(வயது 21) என்ற இளைஞன் தெகிவளையிலுள்ள மிருககாட்சிச்சாலையில் உள்ள மூன்று சிங்கங்கள் அடைக்கப்பட்ட கூண்டுக்குள் பாய்ந்துள்ளார். சிங்கத்தால் தாக்கப்பட்டு இந்த நபர் கடும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# இடர்கால கொடுப்பனவு

( மருதமுனை நிருபர் நழீம் எம்.பதுார்தீன்)

வடக்கு கிழக்கு மாகாண சபைக்குக் கீழ்வரும் சகல திணைக்களங்களுக்கும் 1999ம் ஆண்டிற்கான இடர்காலக் கொடுப்பனவை வழங்குமாறு ஆளுனர்பணிப்புரை விடுத்துள்ளதாக அறிகிறோம்.

இவ்விக்கட்டான சூழ் நிலையில் கடமைபுரியும் எமது தோழர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படுமானால் அவர்களின் துயர் தீர ஏதுவாயிருக்கும்.

சுகாதாரத் திணைக் களத்தில் மட்டும்இக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக செய்தியறிந்தோம். ஏனைய திணைக்கள ஊழியர்கள்இதனால் விசனமடைந்துள்ளனர்.

தயவுசெய்து இக்கொடுப்பனவு பற்றிய தற்போதைய சூழ் நிலையை விளக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம் என அரசாங்க பொது ஊழியர் சங்க பொதுச் செயலாளர் நிதி அமைச்சுக்கு அனுப்பியிருக்கும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

### அடையாள அட்டை வழங்கவில்லை

(களுவாஞ்சிக்குடி நிருபர்)

பட்டிருப்புகல்வி வலயத்தில் ஒப்பந்த அடிப்படை ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்கப் பட்டவர்களுக்கு இது வரையில் அலுவலக அடையாள அட்டை வழங்கப்படவில்லை என ஒப்பந்த அடிப்படை ஆங்கில ஆசிரியர் ஒன்றியத் தலைவர் ஆறுவதை தெரிவித்தார். இவ்விடயம் பற்றி பல தடவைகள், வலயக்கல்விப் பணிப்பாளருக்கும், உயர் அதிகாரிகளுக்கும் முறையிட்டு இருப்பதாக அவர் மேலும்



முனைத்தீவு அற நெறிப் பாடசாலை ஆசிரியர் தின விழாவில் பெரியபோரதீவு - முனைத்தீவு - பட்டாபுரம் ஆலய பிரதம குரு பொன்னம்பலக் குருக்கள் மங்கல விளக்கேற்றுவதையும், அறநெறி ஆசிரியை சு. ஜெயலெட்சுமிக்கு மாணவி மலர் மாலை அணிவிப்பதையும், ஆலய தலைவர், முன்னாள் தலைவர், அற நெறி ஆசிரியர்களையும், படங்களில் காணலாம்.

# பேச்சளவில் சமாதானம் வந்துவிடாது அதற்கான முன் முயற்சிகள் தேவை

## — கல்முனை: சமாதான அமைப்பு செயலாளர் —

(நற்பிட்டிமுனை நிருபர்)

இன்றைய இலங்கை மாதா தன்னிடமிருந்த சமாதான சிசுவைத் தொலைத்துவிட்டு அல்லும் பகலும் தலைவிரி கோலமாக அலைந்து திரிகின்றாள் என அண்மையில் நற்பிட்டிமுனை கிராமிய தொழில் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற சமாதான சொற்பொழிவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கல்முனை சமாதான அமைப்பின் செயலாளர் எம்.எஸ்.ஜெலீல் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் சமாதானம், சமாதானம் என்று உதடுகளால் உச்சரிப்பதால் மாத்திரம் சமாதானம் வந்து விடப்போவதில்லை. அது ஒவ்வொருவரினதும் உள்ளத்தில் ஊறித் திளைக்க வேண்டும் அத்தோடு சமாதானம் உள்ளார்ந்த ரீதியாக உண்மையாக வெளிப்படுத்தப்படல்வேண்டும். அதற்கு உறுதுணையான காரணிகளாக தொடர்பாடல், செவிமடுத்தல், கருத்துணர்வு போன்றவை எம்மிடையே ஏற்பட வேண்டும்.

இந்நிகழ்வில் கல்முனை சமாதான அமைப்பின் சமாதான சேவையாளர்களான யூ.எல்.கபீலா, கே.விஜயராணி, தொழிற்பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி ஏ.சத்தார் மற்றும்நிலையத்தின் போதனாசிரியர்களும் மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர்.

# கலை நிகழ்வுகளுடன் வை. அஹ்மத்தின் “முக்காடு” சிறுகதைத் தொகுதி வெளியீடு!

"உயிர்ப்பைத் தேடும் வேர்கள்" வெளியீட்டகத்தினால் மட்டுமாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும் சாஹித்திய மண்டல பரிசுப்பெற்ற எழுத்தாளருமான அஷ்-ஷஹீத் வை.அஹ்மத்தின் நினைவையொட்டி "முக்காடு" எனும் அவரது சிறுகதைத் தொகுதி வெளியிடப்படவுள்ளது. இம்மாதம் 19ம் திகதி வாழைச்சேனை அன்னூர் தேசிய கல்லூரியின் கலா மண்டபத்தில் இடம் பெறும் இவ்விழா இரு அமர்வுகளாக இடம் பெறும். இவ்விழாவுக்கு எம்.ஏ.ஸலாம் (ப.நோ.கூ.ச.பொது முகாமையாளர்), யூ.அஹ்மதும்(ஆசிரிய ஆலோசகர் - வலயக்கல்வி அலுவலகம்) தலைமை ஏற்பர். நூல்விமர்சனம் எச்.எம்.எம். இஸ்மாயில், நினைவுக்கவி எம்.ஐ.ஹைதர் அலி, நூலின் பதிப்பாசிரியரும் ஆய்வாளருமான ஏ.பி.எம்.இத்ரீஸ்(விரிவுரையாளர்) விஷேட அதிதியாக கலந்து கொண்டு கதை இலக்கியம் தொடர்பாகஆய்வுரை நிகழ்த்துவார். மற்றும் அனுபவப் பகிர்வு, நாடகம்,பட்டிமன்றம் குறுந்திரைப் படம், என்று இதன் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெற இருக்கின்றனஎன்பது குறிப்பிடத் தக்கது.



**திருகோணமலை மாவட்ட முன்னேற்ற சங்கம் உலக கனடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்துடன் இணைந்து அழகியல் கட்டிடகலை பயிற்சி ஒன்றினை (மோத காலம்) இளைஞர் யுவதிகளுக்கு வழங்கி வருகிறது. தி.மா.மு.சங்கத்தின் இப் பயிற்சிக்கான நிலையத்தினை சம்பிரதாய பூர்வமாக சமீபத்தில் உலக கனடிய பல்க்லைக்கழக சேவை திருமலை மாவட்ட இணைப்பாளர் திருமதி யூடி தேவதாசன் திறந்து வைப்பதையும், அருகில் தி.மா.மு.சங்கத்தின் தலைவர் சை.லக்ஸ்மன், பொருளாளர் ப.கந்தசாமி, பயிற்சி இணைப்பாளர் ந.சிங்காரவேலு ஆகியோர் நிற்பதையும் காணலாம்**

**(படம் - திருமலை நிருபர் எஸ்.எஸ்.குமார்)**

# சாரணீயப் பயிற்சி

(எஸ்.எஸ்.குமார்)

வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் சகல பாடசாலைகளிலும் சாரணீய செயற்பாடுகளை அமுல்படுத்துமாறு அதிபர்களுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

இதன் ஓர் கட்டமாக திருகோணமலையில்50 ஆசிரியர்களுக்கு சாரணீய பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.

எதிர்வரும் 10.11.12ம் திகதிகளில் தி/விக்னேஸ்வரா மலை மாவட்ட சாரணர் சங்கத்தின் உதவிமாவட்ட ஆணையாயாளர் (பயிற்சி)இ.ராஜாரற்சன் தலைமையிலானகுழுவினர்இப் பயிற்சிகளை வழங்குவார்கள்.

தமிழ் சிங்களம் ஆகிய மொழிகளில் 32 பேருக்கு சாரணர் பயிற்சியும், 18 பேருக்கு குருளைச் சாரணர் பயிற்சியும் வழங்கப்படும். இதற்காக கல்வித் திணைக்களம் 25 ஆயிரம் ரூபாய்களை ஒதுக்கீடு செய்துள்ளது.

## திடீர் பரிசோதனை

(அட்டாளைச் சேனை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கடந்தசனிக்கிழமை வாகனங்களை சோதனையிடும் முயற்சியில் திடீர் சோதனை நடாத்திய போது அன்றைய தினம் சில மணி நேரத்திற்குள் இரு நூற்றிற்கும் அதிகமான வாகனங்களுக்கு அத்தாட்சிப்பத்திரம் இல்லாத வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம் பெறாத தலைக்கவசமற்று மோட்டார் சைக்கிள் ஓட்டிச் சென்றோர்களைஉரிய பொறுப்பதிகாரிகளால் கண்டறிய முடிந்ததாக தெரியவந்தது.

அன்றையதினம் பொலிசாரிடம் சிக்கிக் கொண்டோர்களுள் அனேகமானோர்வெளிப் பிரதேசங்களிருந்து பிரயாணத் தினை மேற்கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொக்கட்டிச்சோலையில் அனாதை இல்லம்

(அரியம்)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களின் தலைமை ஒன்றியத்தின் அயராத முயற்சியின்பயனாக கொக்கட்டிச் சோலையில் அனாதைச் சிறுவர் இல்லம் அமைக்கப்படவுள்ளது.

"கதிரொளி" இல்லம் என்ற பெயரில் திறக்கப்படவுள்ள இவ்வில்லம்அமைப்பு சம்பந்தமான இறுதி தீர்மானங்களை எடுக்கவும், "இந்து சஞ்சிகை" வெளியிடுவது சம்பந்தமாகதீர்க்கமான தீர்மானங்களை மேற்கொள்ளவும் எதிர்வரும் 11ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வளாகத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களின்தலைமை ஒன்றியத் தலைவர் அ.இராசதுரை தலைமையில் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் உள்ள அனைத்து இந்து ஆலங்களின்தலைவர், செயலாளர்கள் கலந்து கொள்ளும்படி இவ்வமைப்பின் செயலாளர் எஸ்.புஸ்பலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தலைவர், செயலாளர்கள் வரத்தவறும்பட்சத்தில் கண்டிப்பாக ஒரு பிரதிநிதியை அனுப்பும்படியும் கேட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் பல முக்கிய விடயங்களும், இந்து மக்களுக்கான கட்டுக்கோப்புக்கள் பற்றியும் ஆராயப்படவிருப்பதாகவும்செயலாளர் தினக்கதிருக்கு

# உதிரிப்பாகங்கள் கையாடல் வழக்கில் பொலிஸ் சார்ஜன்ட்

(கண்டி)

ஏழு இலட்சம் பெறுமதியான வாகனஉதிரிப் பாகங்களை பொலிஸ் போக்கு வரத்துப் பகுதியில் இருந்து சட்டவிரோதமாக கையாடல் செய்த குற்றத்தின்பேரில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருக்கெதிராக கண்டிநீதிபதி டீ.எல்.எம். செனிவிரட்ன,அவருக்கெதிரானகுற்றச்சாட்டுக் கோவையை சட்டமா அதிபரிடம் இருந்துபெற்றுஅடுத்த தவணைக்கு முன் நீதிமன்றில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இந்த சார்ஜன்ட் மாவனல்ல பொலிசில்கடமையாற்றி வந்துள்ளார். இவர் ஏற்கனவே இக் குற்றம்சம்பந்தமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின் ஒரு லட்சம் ரூபா பிணையிலும் இரு சரீரப்பிணையிலும் விடப்பட்டிருந்தார்.

அறிக்கைகளின் படி இக் குற்றவாளி போகம்பரை பொலிசாரின் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவில் இருந்தே இவ் வாகன உதிரிப்பாகங்களை கையாடல் செய்துள்ளார். எனவும் அத் தருணங்களில் அவர் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்தார் எனவும் இதே வேளை இக் குற்றத்திற்காக இவர் கைது செய்யப்படும் வேளையில் களுத்துறையில் உள்ள பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் உப பரிசோதகர்களுக்கான பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் நீதிமன்றில் இவ் வழக்கிற்காக பிரசன்னமாயிருந்த கண்டி"மோசடி தவிர்ப்பு பிரிவு" சார்ஜன்ட் ஆர்.எம்.தயாபால தாங்கள் இக்குற்றம் சம்பந்தமான, அறிக்கையை சட்டமா அதிபருக்கு சமர்ப்பித்து விட்டதாகவும் அதனது குற்றப்பத்திரத்தை தாங்களும் எதிர்பார்த்துக்காத்துக் கொண்டிருப்பதாக நீதி மன்றத்திற்கு தெரிவித்தார்.

நீதிபதி இவ் வழக்கை 14ம் திகதி ஒத்தி வைத்ததோடு குற்றவாளியை மேற் குறிப்பிட்ட தினத்தில் நீதிமன்றிற்கு வரும்படியும் பணித்தார்.

## தாயும் தனையனும் உயிர் தப்பினர்

(அரியம்)

மட்டக்களப்பின், பிரபல தேசிய கல்லூரியொன்றில் நேற்று முன் தினம் பாடசாலைக்குச் சமூகமளித்த மாணவர்களைத் திருப்பியனுப்பி அவர்களது பெற்றோர்களைஅழைத்து வருமாறு அதிபர் பணித்ததன் பேரில் பெற்றோர்கள் நேற்று அங்கே வந்திருந்தனர்.

இதே வேளை அதிபரின் வேண்டுகோளின் படி கல்லடியைச் சேர்ந்த7ம்ஆண்டு மாணவனொருவன் தனது தாயை சைக்கிளில் ஏற்றிக்கொண்டுமேற்படி கல்லூரிக்கு வரும் வழியில் கல்லடி பாலத்திற்கு சமீபமாக தாயும் மகனும் விழுந்திருக்கின்றனர். இதனால்மாணவனின் சீருடை கிழிந்தது, தாய்க்கு காயம் ஏற்பட்டு தெய்வாதீனமாக இருவரும்உயிர் தப்பியுள்ளார்கள்

# குறைந்த கட்டணத்தில் கணனிப் பயிற்சி நெறி

(அட்டாளைச்சேனை நிருபர்)

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தோடு இணைந்து முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் கணணிப் பயிற்சியினைவழங்க அட்டாளைச் சேனை "ஸ்டார் ஜெம்" நிறுவனம் முன் வந்துள்ளது. முழுக்க முழுக்க மாணவர்களின் நலன் கருதி ஏற்பாடு செய்யப்பட்ட இக் கணணிப்பயிற்சி நெறியினை மேற்கொள்வோர்களுக்கு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வசதி செய்திருப்பதோடு பயிற்சி நெறியினை சிறப்பாக பூர்த்தி செய்வோருக்கு உயர் சான்றிதழும் வழங்கப்படவிருப்பதாக நிறுவனத்தின் முகாமையாளர் ஓய்வு பெற்ற விரிவுரையாளரான முகமதுஅப்துல் காதர் தெரிவித்தார். அண்மையில் இப்பயிற்சிநெறியில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான கால எல்லை முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது. இருந்த போதும் தற்போதுகாலஎல்லை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் விரும்பிய மாணவர்கள்ப்திவு செய்துகொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கணணிப்பயிற்சி நிறுவனம் எதிர்வரும் சனிக்கிழமை 11ந்தேதிதிறந்து வைக்கப்படவுள்ளதாகவும் பிரதம அதிதியாக வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.பீ.எச்.முகம்மது அவரோடு சிறப்பு அதிதிகளாக தேசிய பாடசாலைஅதிபர் பீ.எம்.எம்.ஏ.கபூர் ஏனைய பாடசாலை அதிபர்களும், விரிவுரையாளர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்கள்.

# பரிசளிப்பு விழா

(மருதமுனை நழீம் எம்.பதுார்தீன்)

மருதமுனை சைக்ளோன் இளைஞர் கழகம் நடாத்தும் வருடாந்த பரிசளிப்பு விழாவும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 10.11.2000ம் திகதி வெள்ளிக்கிழமை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி ஆராதனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

4ம் ஆண்டு மாணவர்களுக்கான தமிழ்ப்பரீட்சை, 5ம் ஆண்டுக்கான ஆங்கிலப்பரீட்சை, இஸ்லாமிய பயிற்சிப் பாசறையில் கலந்து கொண்ட யுவதிகளுக்கான சான்றிதழ்களும்பரிசும் வழங்கப்படவுள்ள இவ்விழாவுக்குப் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எஸ்.எம்.ஏ.காதர், கௌரவ அதிதிகளாக எஸ்.ஏ.ஆர். எம்.மௌலானா, இ.சே.அதிகாரி எம்.ரி.எம்.ஹாறுான், சட்டத்தரணி ஏ.எம்.பதுாறுதீன்,சிறப்பு அதிதிகளாகஎஸ்.எல்.இப்.லெப்பை(அதிபர்), ஏ.எல்.எம். தாஹிர்(அதிபர்), எம்.எஸ். ஜகுபர்தீன்(அதிபர்), எஸ்.எம். எஸ்.எச்.பாரிமவ்லானா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# வன்னியில் சமாதானத்தின் ஒளிக்கீற்று!

**கேள்வி:-** நோர்வே தான் எடுத்துக் கொண்டுள்ள சமாதான முயற்சிகளில் தொடர்ந்து பங்கு பற்றுமா?

**பதில்:-** நாங்கள் இவ் விடயத்தைப்பற்றி நோர்வேயிற்கு ஞாபகப்படுத்தியுள்ளோம் ஜனாதிபதியும்இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார். இந்த நிமிடத்தில் சமாதானம் சம்பந்தமான எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப் படவில்லை இதனை ஞாபகத்தில் வைத்திருங்கள். சமாதான பேச்சுவார்த்தை களுக்கான சந்தர்ப்பங்களும், தேவைகளும் உருவாகும்பொழுது எவ்வேளையிலும் நோர்வே எங்களுக்குத் தேவை. நோர்வேயும் இதனை செய்வதில்ஆர்வங் கொண்டுள்ளது. இதனையிட்டு நான் மனமகிழ்ச்சி அடைகிறேன் ஆனால் இப்பொழுது இதுவிடயமாகஎந்த பேச்சுவார்த்தைகளும் நடக்கவில்லை. நான் இதனை தெளிவுப்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

**இவ்வாறு நோர்வே சென றிருந்த லக்ஸ்மன் கதிர்காமர் ஒக்டோபர் 17.2000 அன்று நோர்வே தொலைக்காட்சி பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். (சண்டே டைம்ஸ், ஒக்டோபர்22.2000)**

கரு மேகங்களோ, இடிமுழக்கங்களோ, மின்னல்களோ இல்லாமல் திடீரென மழை பொழிவதைப் போல் முன்னறிவித்தல்கள் எதுவுமில்லாமல் நோர்வே பிரதிநிதிகள் வடக்கின் முக்கிய நிலப்பகுதியான வன்னியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை சந்தித்து இரண்டு மணித்தியாலயங்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இது இலங்கை மக்களுக்கு ஓர் திடீர் மழையே.

நொவம்பர் மாதம் 1ம் திகதி புதன்கிழமை புலிகளின் குரல் வானொலி புலிகளின் தலைவருக்கும் நோர்வேயின் பிரதிநிதிகளுக்குமிடையில் அன்று நடந்த பேச்சுவார்த்தை பற்றிக் கூறியது

சந்திரிக்கா குமாரதுங்காவின்வழமையான வாய்ப்பேச்சுக்களான போரும் சமாதானமும் என்ற நிலமைகளின் கீழ் இப்படியான ஓர் சந்திப்பு எதிர்பார்த்திருக்க முடியாத ஒன்றாகும். அவரது பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூட தீவிரமான சிங்கள உரிமைகளை முன்மொழிந்தார். புலிகளுடனும், அவர்களது பயங்கரவாதத்தோடும் எந்த விதமான பேச்சுக்களுக்கும் இடமில்லையெனவும் போரின் மூலமோசமாதானத்தை எட்டமுடியும் எனவும் கூறி வந்த இந் நிலமையில்இது எதிர்பார்க்காத ஒன்று.

"இதே வேளை நோர்வே சென்றிருந்த லக்ஸ்மன் கதிர்காமரும் தனது நோர்வே தொலைக்காட்சி பேட்டி நிகழ்ச்சி ஒன்றில் நோர்வேயினது சமாதான முயற்சிகள் எஸ்தம்பிதமடைந்து விட்டதாகவும்இனி எல்.ரி.ரி.ஈ. யினருடன் பேசுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை யெனவும் வெளியிட்டதில் அவருக்கும் இதில் ஈடுபாடில்லை என்பது விளங்கியது. இப்படியான கர்வமுள்ள பேச்சுக்களின் மத்தியிலும் கடந்த தேர்தலில் இவர்களது பிரசாரங்களை நம்பிய சில மக்கள் சமாதானம் ஏற்படும் என்றுஇவர்களுக்கு வாக்குப் போட்டார்கள்.

குமாரதுங்காவின் ஆட்சியில் சர்வதேச சமூகத்தின் நெருக்குதல்களினால் ஓர் பேச்சுவார்த்தைமூலம் சமாதானத்தை நெருங்க வேண்டிய நிலமை கொழும்பில் ஏற்பட்டது. பலஆண்டுகளாக ''சமாதானத்திற்காகவே போர்'' எனும்

## சமாதானம் சம்பந்தமாக எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை!

சந்திரிக்காவின் செயற்பாடு தேசிய சர்வதேச சமூகத்தின் பார்வையை மழுங்கடித்திருந்தது. இப்போது இது ஓர் கேலிக்குரியதாக மாறிவிட்டது.

கிழக்காசியாவில் ஓர் நீண்ட யுத்தத்தை எல்.ரீ.ரீ.ஈ.யினர் கட்டவிழ்த்துவிட்டனர். இதனால் இரு தரப்பினரும்பரஸ்பரம் சர்ச்சைக்குள் ளாகினர் இதன் மூலம் மக்கள் சொல்லொண்ணாத் துயரங்களுக் குள்ளாகினர். இவ் வேளையில் சமாதானத்திற்கான சில மணி நேரங்களும் தேவைப்பட்டன. இதனால் நோர்வே இலங்கைக்காக புதுஉறவுகளை அமெரிக்காவுடனும் இந்தியாவுடனும் ஏற்படுத்திக் கொண்டு சமாதான முயற்சிகளை மேற்கொள்ள இத்தீவிற்கு நோர்வே வந்தது! இவ்வேளை நோர்வேயால் சாத்தியமில்லை எனும் கருத்துடைய (நோ-வே) விமர்சனங்கள் எழும்பின.

இந்த சமாதான முயற்சிகள் அரசுக்கு மட்டுமே அழுத்தங்களைக் கொடுக்காது எல்.ரீ.ரீ.ஈ. யினர்களுக்கும் அழுத்த ங்கள் உண்டு. ஓர் உண்மை உண்டு ஆனால் ஒரே ஒரு உண்மை மட்டும் இதில் அடங்கியிருக்கவில்லை.இது எல்.ரீ.ரீ.ஈ. யினர் தங்களது படைகளை யாழ்ப்பாணத்தை நோக்கி நகர்த்துவதை

## "இதுவும் ஓர் அரசியல் தந்திரம் என்று சொல்லமுடியாத படி இருக்கும்"

நிறுத்தி வைப்பதில் ஆளுமை செலுத்தும். அண்மைக் காலமாக சர்வதேச சமூகம் இது விடயமாக அக்கறை எடுக்கவில்லை. ஏனெனில் பாராளுமன்ற தேர்தல் நடந்து கொண்டிருந்ததால் தேர்தல் காலங்களில், சந்திரிகா குமாரதுங்காவின்அரசு சாவகச்சேரிப்பகுதிகளில் யுத்தத்தைப் பரப்பி தங்களது வெற்றிக்கு முயற்சி செய்தார்கள். இதற்குப் பதிலாக எல்.ரீ.ரீ.ஈ.யினர் ஓயாத அலைகள் -4 எனும் படை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். எனினும் தேர்தல்களிற்குப் பிறகு சர்வதேச சமூகம் மிகவும் உறுதியோடு இரு பகுதிகளிலும் வந்திறங்கி தனது செயற்பாட்டை உக்கிரப்படுத்தியது. நோர்வே இதற்கு மீண்டும் புத்துயிர் அளித்துள்ளது.

நோர்வேயினது சமாதான பேச்சுவார்த்தையானது ஒரு வித நாடக பாணியானதும் கற்பனை கலந்ததுமான திறமையான நிர்வாகத்தன்மை தேவை என்பதை உணர்த்துவதாகவும் உள்ளது. நோர்வே பிரதிநிதிகள் வழமையாக இதற்கானமுயற்சியாக ஒஸ்லோவுக்கும்.லண்டனுக்கும். கொழும்புக்கும் இடையில் துரிதமாக சென்று வந்தனர். இப்போது இது வன்னிக்கும் செல்லவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தி விட்டது.

காலமானது தமிழீழ விடுதலைப் புலிகளின் ஈடற்ற நிலையிலுள்ளதலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனோடு பேசுவதற்கு துணிந்துள்ளது. இப் பேச்சுக்கள்சமாதான முன்னேற்றங்களுக்குமிகவும் உதவிகரமானதாக இருக்கும். நோர்வே இவ்விடயத்தை எளிமையான தாக்குமுகமாக லண்டனில் தங்கியுள்ள எல்.ரீ.ரீ.ஈ.யினரது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தையும் கண்டு உரையாடியது.

திரு அன்ரன் பாலசிங்கம் உத்தரவாதம் வழங்கியிருந்தாலும் நம்பிக்கையளிக்கும் விதமாக பேசியிருந்தாலும் திரு.பிரபாகரன் அவர்கள் கலந்துரையாடலில் கலந்துகொள்வதே விரும்பத் தக்கது.

முதலாவதாக இந்த சமாதானபேச்சுக்கள் பிரபாகரனால் ஏற்பாடு செய்யப்படவில்லை என்ற எண்ணத்தை நீக்கும். அதோடு இதுவும் ஓர் அரசியல் தந்திரம் என்று சொல்ல முடியாதபடி இருக்கும்.

இரண்டாவதாக நோர்வேயோ அல்லது அதன் விசேட பிரதிநிதி எரிக் சொலஹெய்மோ இதன் உண்மைத் தன்மையை சந்தேகத்திற்கிடமில்லாமல் அறிய நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கல்ாம்.

மூன்றாவதாக பிரபாகரன் முக்கியமான சாட்சிகளை ஏற்படுத்திப்படுவதை வழமையாக தவிர்த்து வருபவர். அதனால் இதனைமுன் னிறுத்தி எல்.ரீ.ரீ.ஈ. யினரைமுன் னுக்கு இழுத்திருக்கலாம்.

நாலாவதாக இது ஓர் பெரிய ஒத்த தன்மையை அதாவது ஜனாதிபதியுடன் நோர்வே பிரதிநிதிகள் பேசியது போல பிரபாகரனுடனும் பேசியதை வெளிப்படுத்தத்திட்டமிட்டிருக்கலாம்.

தற்போது இலங்கையின் தலைவரும் புலிகளின் தலைவரும் இவ் விடயத்தில் நேரடியாக உள்வாங்கப்பட்டு விட்டார்கள். இதனைஎதிர்பார்த்தே பிரபாகரனை சந்திக்க நோர்வே பிரதிநிதிகள் விரும்பியிருக்கலாம்.

இவ் விஜயம் சில தெளிவான காரணங்களுக்காக ரகசியமாகவும், நம்பிக்கைக் குரியதுமாக வைக்கப் பட்டிருந்தது. ஓர் உத்தியோகப்பூர்வ அழைப்பு எல்.ரீ.ரீ.ஈ.யினரிடம் இருந்து பெறப்பட்டிருந்தது. இவ் விஜயம் அரசாலும், அதிகாரபூர்வமாக அங்கிகரிக்கப்பட்டிருந்தது. சொலஹெய்ம் கொழும்பு வந்திறங்கியதும் மறைக்கப் பட்டிருந்தது. எரிக் சொலஹெய்ம் தலைமையில் மூன்று பிரதிநிதிகள் வந்திருந்தனர். கொழும்புக்கான நோர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்றபெக். ஓர் நோர்வே வெளிநாட்டமைச்சின் உயரதிகாரி கெஜிறிஸ்ரி ரொம்ஸ்டல். ஆகியோர் கெலிகொப்டரில் ஒக்டோபர் 31. செவ்வாய்க்கிழமை வவுனியா பயணமானார்கள்.

அதன் பின் அவர்கள் மோட்டார் வாகனம் ஒன்றில் மடுவுக்கு பயணமானார்கள். இவர்கள் முதலில் சில சமய பெரியார்களையும் சில சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்தனர். அதோடு மடுவில் இரு அகதிகள் முகாமிற்கும் சென்று பார்வையிட்டனர்.

புதன்கிழமை இப் பிரதிநிதிகள் மல்லாவியிற்குப் பயணமானார்கள். அங்கு சில அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும், சமூக, சமய தலைவர்களையும், சமுதாய பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களையும் சந்தித்து உரையாடினார்கள். மல்லாவி சென்றதற்கான முக்கிய நோக்கமே எல்.ரீ.ரீ.ஈ.யினரை சந்தித்துப் பேசவே.

தமிழில் : ரூபன்

(தொடரும்)

## கருத்தரங்கு
### இது உங்கள் பக்கம்

மீண்டும் கருத்தரங்கு இப்பகுதியில் ஆரம்பமாகியிருக்கிறது. தேர்தலுக்குப் பின் மக்கள் பிரதிநிதிகளிடம் எதிர் பார்க்கும் தேவைகள், அரசியல் நிலைமை நோர்வேயின் சமாதான முயற்சிகள் போன்ற பல விஷயங்களில் வாசக நேயர்கள் தங்கள் கருத்துக்களை இப்பகுதியில் வெளியிட வாய்ப்பளித்திருக்கிறோம். இனி இது உங்கள் பக்கம்.

ஆசிரியர்

## குருமண்வெளி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு குருமண்வெளி அருள்மிகு ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் எதிர்வரும்13ம்திகதி திங்கட்கிழமை மகா கும்பாபிஷேக நிகழ்வு இடம் பெறவுள்ளது.

கிரியாகால நிகழ்வுகளாக 9ம் திகதி வியாழக்கிழமை விநாயகர் வழிபாடு. புண்ணியாக வாசனம்.அனுக்ஞை, பேரிதாடனம், திரவிய சுத்தி, திரவிய பாகம், போன்ற கிரியைகளும், 10ம் திகதி வெள்ளிக்கிழமை ஆச்சாரிய சம்பாவனை, புண்ணியாகவாசனம், கணபதி ஓமம், ரக்சோக்ண ஓமம், வேததோத்திர பாராயணமும், 11ம் திகதி சனிக்கிழமை புதியமூர்த்தி தானியாதிவாசம், ஜலாதிவாசம், கிராமப்பிரதட்சனம், சயனாரோகணம், ஆதித்யாக்கினி சங்கிரணம், யாகபூஜையும், 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தலாப்பியாங்கம்,பஞ்ச முகர்ச்சனை,தீபாராதனை, வேததோத்திரபாராயணம்,போன்ற கிரியைகளும் இடம் பெறும். இதே தினத்தில் (12-11-2000) காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணிவரையும் எண்ணைக்காப்பு சாத்தும்வைபவம் நடைபெறவுள்ளது.

13ம்திகதி திங்கட்கிழமை குறித்த சுப முகூர்த்தத்தில் வேததோத்திர நாதஸ்வரம் முழங்க மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

கிரியாகால கிரிகைகளை பிரதிஷ்டாபிரதமகுரு சர்வபோதகர் சோதிடமணி,விநாயக பூஜா துரந்தரர் சாதக போதகர் சிவ ஸ்ரீ கா. நீதிநாதக் குருக்கள், சைவ சித்தாந்தச் செம்மல் சிவ ஸ்ரீவே. யோகராஜாக் குருக்கள், ஆசாரியத் திலகம் சிவ ஸ்ரீ வே. யோகராஜாக் குருக்கள்.சிவஸ்ரீதி. கேயூரநாதசர்மா சிவ ஸ்ரீ த. இந்திரவர்ம சர்மா ஆகியோர்முன்னின்று நடாத்துவார்கள்.

அடியார்கள் கிரியா காலத்தில் பால், தயிர், இளநீர், பூ, பூமாலைகள் என்பன கொண்டு வரும்படி தேவஸ்தான பரிபாலன சபையினர் வேண்டுகிறார்கள்.

எண்ணெய்க்காப்புக்கு வேண்டியசுத்தமான எள்ளெண்ணை ஆலயத்தில் வழங்கப்படும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர்.

## தேசிய தொழில் வழிகாட்டல் வாரம் 2000

(ஐ.எல்.ஜலீல்)

முறைசார்ந்த கல்வியை முடித்து பாடசாலை வாழக்கைக்கு விடை கொடுத்து விட்டு இருக்கும் மாணவ, மாணவிகள் நாளை இச் சமூகத்திலே சுயமாக வாழ வேண்டியநிலைக்கு தள்ளப்படுவார்கள்.

2000 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியுள்ள மாணவர்கள் பல்லாயிரக்கணக்கான கனவுகளுடனேயே பாடசாலையை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

அடுத்தபடியாக என்ன செய்யப்போகிறார்கள்? பரீட்சையில் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்றிருந்தாலும் சிலவேளை பல்கலைககழகத்துக்கு அனுமதி கிடைக்காமல் போகும்.

இந்நிலையில் மேலும் கல்வியை தொடர்வதா? ஏதாவது ஒருதொழிலுக்குச் செல்லப் போகிறார்களா? வர்த்தக நடவடிக்கைகளைஆரம்பிக்கப்போகிறார்களா? அப்படி இல்லாவிடில் தொழிற்பயிற்சியினை பெற்றுக் கொள்ளப் போகிறார்களா? இத்தீர்மானம்எதனை எடுப்பதாயினும்மாணவ, மாணவிகளுக்கு இவை பற்றிய தகவல்கள் தேவைப்படும். இவைகளைப்பற்றிய அறிவூட்டலினை அளிக்கும் பொருட்டு தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றம், கல்வி அமைச்சு, இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, மற்றும் பல நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து தொழில்வழிகாட்டல் வேலைத்திட்டத்தினை நாடு பூராகவுமுள்ள 200 பாடசாலைகளைச் சார்ந்ததாக நவம்பர்06 தொடக்கம் 12 வரை நடாத்துகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் இவ்வழிகாட்டல் நிகழ்வினை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எஸ்.எம்.ஏ. காதர் இளைஞர் சேவைகள் அதிகாரிகள் ஏ.முபாரக் அலி, எஸ்.எம்.ஏ.லத்தீப் போன்றோரின் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.




# சாய்ந்தமருது பிரைன் லீடர்ஸ் வெற்றி!

(ஐ.எல். ஜலீல்)

கல்முனை சந்தாங்கேணி பொதுவிளையாட்டு மைதானத்தில் 20 ஓவர்கள் கொண்ட கிரிக்கட் கடின பந்து சினேக பூர்வ விளையாட்டு போட்டி நடைபெற்றது. இதில் கல்முனை டொப் றோங் விளையாட்டுகழகமும், சாய்ந்த மருது பிரைன் லீடர்ஸ் விளையாட்டு கழகமும் மோதிக் கொண்டன.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற சாய்ந்தமருது பிரைன் லீடர்ஸ் விளையாட்டு கழகத் தலைவர் சாக்கீர் உனுசன் நமதுஅணியினரை துடுப்பெடுத்தாடும்படிவேண்டிக் கொண்டார்.பிரைன் லீடர்ஸ் 20 ஓவர்கள் நிறைவில் 05விக்கட்டுகளை இழந்து 159 ஓட்டங்களினைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் சாதீக் 43பந்துகளினை எதிர்த்து 29ஓட்டங்களினைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் கல்முனைடொப்றோங் விளையாட்டுக்கழகம் சுல்பிக்கார் 04 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களை கொடுத்து 03விக்கட்டுக்களை கைப்பற்றினார்.பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கல்முனை டொப்றோங் விளையாட்டு கழகம் 19.3 பந்து வீச்சுக்களில்சகல விக்கட்டுக்களையும் இழந்து127 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. துடுப்பாட்டத்தில் றபீக் 28 பந்துகளுக்கு 24 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் சாய்ந்தமருது பிரைன் லீடர்ஸ் றதீஸ் 04ஓவர்கள் பந்து வீசி 23ஓட்டங்களினைக் கொடுத்து 04விக்கட்டுக்களினைக் கைப்பற்றினார்என்பது குறிப்பிடத்தக்கது..

# மாபியா கும்பலுடன் தொடர்பு அசாருதீன் மீது நடவடிக்கை

(புதுடெல்லி)

கிரிக்கெட் சூதாட்டம் பற்றி சி.பி.ஐ.விசாரணை நடத்தி 162 பக்க அறிக்கை கொடுத்தது அல்லவா? அதில் முன்னாள் காப்டன் அசாருதீன்? ஜடேஜா பிரபாகர் மொங்கியா, அஜய்சர்மா ஆகியோருக்கு சூதாட்டத்தில் தொடர்பு இருப்பதாக கூறிப்பட்டு இருக்கிறது.

இதையடுத்து அசாருதீன் உள்பட 5 பேரும் இனி எந்த போட்டிகளிலும் விளையாடக் கூடாது என்று இந்திய கிரிக்கட் சபை தடை விதித்து உள்ளது.

**மாபியா கும்பல் தொடர்பு**

மேலும் அசாருதீனுக்கும் மாபியா கும்பலுக்கும் தொடர்பு இருந்ததாக சி.பி.ஐ.அறிக்கையில் குற்றம் சாட்டி உள்ளது. மேலும் மும்பை குண்டு வெடிப்பு வழக்கின், முக்கிய குற்றவாளியாக கருதப்படும் டைகர் மேமனுக்கும் அசாருதீனுக்கும் தொடர்பு இருப்பதும் தெரியவந்து உள்ளது. இதற்கு ஆதாரமாக மேமன் குடும்பத்தினருடன் அசாருதீன் எடுத்துக் கொண்ட புகைப்படம் போலிசாரிடம் சிக்கி இருக்கிறது. இதை விசாரணைக்காக சி.பி.ஐ. கேட்டு உள்ளது.

**அத்வானி பதில்**

எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று உள் துறை மந்திரி அத்வானியிடம் கேட்கப்பட்டது. இதற்கு அத்வானி கூறியதாவது:-

மாபியா கும்பலுடன் கிரிக்கெட் வீரர்களுக்கு தொடர்பு இருப்பதாக சி.பி.ஐ.அறிக்கையில் உள்ளது. எனவே இது குறித்து மத்திய அரசு ஆராய்ந்து வருகிறது. மத்திய சட்ட அமைச்சகத்தின் ஆலோசனையின் பேரில் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கூறினார்.

# காரைதீவு விளையாட்டு கழகம் வெற்றி

(ஐ.எல்.ஜலீல்)

கல்முனை டொப்றோங் விளையாட்டு கழகம் நடாத்தும் வெற்றிக் கிண்ணத்துக்கான அரை இறுதிக் கிரிக்கட் போட்டி நிகழ்வு அண்மையில் கல்முனை சந்தாங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. 20 ஓவர்கள் கொண்ட கடின பந்து கிரிக்கட் அரை இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டுக் கழகமும், காரைதீவு விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

காரைதீவு வி.க.20 ஓவர்கள் நிறைவில் 09 விக்கட்டுக்கள் இழப்புக்கு 122 ஓட்டங்களை பெற்றது. விஸ்வநாதன் 36 பந்து வீச்சுக்களினை எதிர்கொண்டு 46 ஓட்டங்களை பெற்றார். மட்டக்களப்பு கோட்டைமுனை வி.கழக கஜன் 04 ஓவர்கள் பந்து வீதி 28 ஓட்டங்களினை கொடுத்து 02 விக்கட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு கோட்டைமுனை வி.க.20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கட்டுக்களினையும் இழந்து 110 ஓட்டங்களினை மாத்திரமே பெற்றனர். அருள் 44 பந்து வீச்சுக்களை எதிர்கொண்டு 38 ஓட்டங்களினை பெற்றார். பந்து வீச்சில் காரைதீவு வி.கழக சுரேஷ் 04 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களை கொடுத்து 02 விக்கட்டுக்களினைக் கைப்பற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



மகிமைதாசன் கிஷாந்தினி

புள்ளிகள் – 138

கோறளைப்பற்று வடக்கு (வாகரைப்பகுதி) பிரதேசத்தில் 2000 ஆண்டு 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில், 15 பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவர்கள் பங்குபற்றி, வாகரை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மகிமைதாசன் கிஷாந்தினி எனும் மாணவி மாத்திரம் 138 புள்ளிகள் பெற்று 1ம் இடத்தைப் பெற்றுள்ளார்.



சுதாகரன் நிரோஷன்

புள்ளிகள் – 158


ஆரையம்பதி ஆர்.கே.எம். பாடசாலையைச் சேர்ந்த சுதாகரன் நிரோஷன் புலமைப்பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகள் பெற்று இப்பாடசாலையில் முதல் இடத்தில் சித்தியடைந்துள்ளார்.



தேவராஜா யசோபியா

புள்ளிகள் –152

களுவாஞ்சிகுடிசரஸ்வதி வித்தியாலயத்தில் இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஒரேயொரு மாணவி தேவராஜா யசோபியா 152 புள்ளியைப் பெற்றுள்ளார்.




# மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையில் ஹர்த்தாலா?

மட்டக்களப்பில் உள்ள புனித மைக்கல் தேசிய கல்லூரியில் கடந்த வெள்ளி சனி இரு தினங்களும் பாடசாலைக்கு சமூகம் கொடுக்காத சுமார் என்னூறு மாணவர்களை அக்கல்லூரி அதிபர் திருப்பி அனுப்பி பெற்றோர்களை வரவழைத்துள்ளார்.

ஒரேயடியாக எண்ணூறு மாணவர்கள் ஏன் சமூகம் கொடுக்கவில்லையென்பது அதிபருக்கும் அங்கு கடமைபுரியும் சகல ஆசிரியர்களுக்கும் நன்கு விளங்கும்.

தொடர்ந்து மட்டக்களப்பில் 'ஹர்த்தால்' அனுஷ்டிக்க வேண்டுமென பல இயக்கங்கள் வேண்டுகோள் விட்டதாக செய்திகள் வந்தது அதனால்தான். மாணவர்கள் செல்லவில்லை.

கடந்த திங்கட்கிழமை இக்கல்லூரி அதிபர் எண்ணூறு மாணவர்களுக்கு "ஹர்த்தால்" நடாத்தி அவர்களை பரீட்சை எழுத விடாமல் தடுத்தமை மனித உரிமை மீறும் செயலாகும்.

மட்டக்களப்பு இராணுவத்தளபதியின் கட்டளைக்காக நல்ல பெயர் எடுப்பதற்காகவா? இக்கல்லூரி அதிபர் இம்மாணவர்களை திருப்பி அனுப்பினார் என்ற சந்தேகம் மட்டக்களப்பு பெற்றோர்களிடம் எழுந்துள்ளது. ஏனெனில் ஏனைய கல்லூரிகளிலும் மாணவர்கள் வெள்ளி, சனிக்கிழமை வரவு குறைந்துதான் இருந்தது. அவர்கள் மாணவர்களை திருப்பி அனுப்ப நினைக்கவில்லை. இக்கல்லூரிக்கு மட்டும் தனிச்சட்டமா......?

*திருமதி:– விமலேஸ்வரி,*
*புதூர், மட்டக்களப்பு*

# பருவகால பயணச்சீட்டு பெறுவதில் சிரமம்

நியு ஈஸ்டன் பஸ் கம்பனியின் அக்கரைப்பற்று டிப்போவிற்கு கடந்த 2000-11-01 ஆம் திகதி மு.ப.11.30 மணியளவில் பருவகால பயணச்சீட்டு பெறச் சென்ற பாடசாலை மாணவர்களும், ஏனையவர்களும் டிப்போவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் உட்செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அங்கு சென்றவர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் காரணம் கேட்ட போது பருவ கால பயணச்சீட்டு வழங்கும் உத்தியோகத்தர் மதிய உணவிற்காக செல்ல வேண்டுமாகையால் மு.ப.11.30 ற்குப் பின் பயணச்சீட்டு பெறவரும் யாரையும் அனுமதிக்க வேண்டாம் எனவும், பி.ப.2.30 மணிக்குப் பின்னரே அனுமதிக்குமாறும் தங்களை பணித்துள்ளதாக தெரிவித்ததாகவும் பருகால பயணச்சீட்டு பெற சென்றோர் கவலையுடன் தெரிவித்தனர்.

மதிய உணவிற்காக 2½ மணித்தியாலங்கள் கழித்து வரும் உத்தியோகத்தரை பருவகால சீட்டுக்கள் பெற வந்த பாடசாலை மாணவர்களும், ஏனையவர்களும் பஸ் டிப்போவிற்கு முன்னாலுள்ள மர நிழல்களின் கீழ் காத்து நின்று பருவகால சீட்டுக்கள் பெற வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியிருப்பதாகவும். இந்நிலமையை தெரியப்படுத்துவதற்காக டிப்போ உயர் அதிகாரிகளை சந்திப்பதற்காக பருவகால சீட்டு பெறச் சென்றவர்கள் முயன்றும் பயனளிக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

*ஏ.எஸ்.எம்.முஸாதீக்*
*கல்முனை*

# அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு ஒரு சபாஷ்!

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பாதைகளில் ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த மின்விளக்குகளில் அனேகமானவை சேதமடைந்து காணப்பட்டது. இதனால், இரவு நேரங்களில் இப்பாதைகளூடாக பிரயாணம் செய்யும் பொது மக்கள் சௌகரியங்களினை எதிர்கொண்டு வந்தனர்.

பொது மக்களின் நலனில் அக்கறை கொண்டு அட்டாளைச்சேனை பிரதேசசபை சேதமடைந்து காணப்பட்ட மின் விளக்குகளை திருத்தியமைக்கும் பணியில் ஈடுபட்டது. இதன் பொருட்டு பல பாதைகளிலுள்ள மின் விளக்குகள் தற்போது சிறந்த முறையில் எரிவதும், ஏனைய எஞ்சியுள்ள தெரு மின்விளக்குகள் மிக விரைவில் திருத்தியமைக்கப்பட்டு விடும் என்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

*எம்.ஏ.ரமீஸ்*
*அட்டாளைச்சேனை*

# யுனிவர்ஸ் வென்றது.

(ஜெஸ்மி)

மருதமனை கிரிக்கற் கட்டுப்பாட்டுச் சபையின் ஆதரவில் கப்பனா விளையாட்டுக் கழகம் கல்முனைப் பிரதேச அணிக்கு 11 பேர் கொண்ட 10 ஓவர் மென்பந்துக் கிரிக்கற் சுற்றுப் போட்டியின் இறுதி சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி 04-11-2000 சனிக்கிழமை மருதமுனை ஷம்ஸ் மௌலானா சதுக்கத்தில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் மருதமுனை டொக்ஸா விளையாட்டுக் கழகமும், யுனிவர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதியது. யுனிவர்ஸ் கழகம் 6 விக்கட்டுகளால் வெற்றியீட்டி பி.எஸ்.பி.கிண்ணத்தை தன தாக்கிக் கொண்டது

# வேட்டுச் சத்தத்தை தொடர்ந்து வீட்டினுள் ஷெல் விழுந்து வெடித்து குழந்தை மரணம்

## மரண விசாரனையில் சாட்சியம்

(ஓட்டமாவடி நிருபர்)

**'சம்பவ தினம் எங்களது வீட்டுக்கு அருகில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டு சத்தத்தைக் கேட்டு நாங்கள் பயத்தின் காரணமாக வீட்டுக்குள் சென்று மறைந்திருந்தோம் அப்போது வீட்டில் ஷெல் ஒன்று வந்து வீழ்ந்து வெடித்ததினால் வீட்டிற்குள் இருந்த எனது பேரனான ஹரிஸ்வரன் ஸ்தலத்திலேயே துடிதுடித்து இறப்பதைக் கண்டேன்'.**

இவ்வாறு செங்கலடி ரமேஸ்புரக் கிராமத்தில் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி மரணமான கமலேஸ்வரன்-ஹரிஸ்வரன் (6மாதம்)என்ற சிறு குழந்தையின் மரணம் தொடர்பான விசாரணையின் போது சாட்சியளித்த அவரின் அப்பம்மா வடிவேல்-லீலாவதி (59)தெரிவித்தார்.

வந்தாறுமூலை மரண விசாரனை அதிகாரி பி.வீரக்குட்டி மரண விசாரனை நடத்தினார்.இம் மரண விசாரனையின் போது 'அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது சம்பவ தினம் நாங்கள் வீட்டில் மொத்தமாக ஒன்பது பேர் இருந்தோம் சுமார் 7.00 மணியளவில் வீட்டிற்கு அருகில் உள்ள மரண வீட்டிற்கு செல்வதற்காக ஆயத்தமான போது செங்கலடி பிரதேச செயலாளர் காரியாலய பக்கம் இருந்து துப்பாக்கி ஷெல் சத்தங்கள் கேட்டன நாங்கள் உடனே அனைவரும் வீட்டிற்குள் சென்று மறைந் திருந்தோம் அப்போது துப்பாக்கி சூட்டுச் சத்தங்களுடன் ஷெல் வெடிக்கும் சத்தங்களும் கேட்டன அத்துடன் திடீரென வீட்டில் ஷெல் ஒன்று வந்து வீட்டிற்குள்ளும் வெடித்தது அப்போது எனது பேரப்பிள்ளை இறந்து விட்டார்.அத்துடன் மேலும் 4 பேருக்கு காயம் ஏற்பட்டது.இவர்களை கூட்டிக் கொண்டு வெளியில் வரும் போது மேலும் ஒரு ஷெல் வந்து வெடித்தது.

இதனால் என்னைத் தவிர எல்லோருக்கும் காயம் ஏற்பட்டது உடனே காயப்பட்டவர்களை தூக்கிக் கொண்டு வைத்தியசாலைக்கு சென்றோம்.ஆனால் யார் ஷெல் அடித்தது என்று தெரியாது.

பிரேத பரிசோதனையை டாக்டர் கே.சுகுமார் மேற்கொண்டார் பொலிஸ் கான்ஸ்டபிள் ஏ.எம்.றகீம் சாட்சியங்களை நெறிப்படுத்தினார்.

தாக்குதலின் போது ஷெல் வந்து வெடித்து சிதறியதால் ஏற்பட்ட விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## அபிவிருத்தி செய்யத் தவறும் மாகாணசபைக்கு அடுத்தவருடம் நிதியில்லை!

மாகாண சபை அபிவிருத்தி திட்டத்திற்கு என வருடாந்தம் வழங்கப்படும் நிதியின் மூலம் அவ்வருடத்திற்கான அபிவிருத்தி திட்டங்களை செய்யத்தவறும் மாகாண சபைகளுக்கு அடுத்த வருடத்திற்காக நிதி வழங்கப்பட மாட்டாது என பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒரு குறிப்பிட்ட அபிவிருத்தி திட்டத்திற்கு முற்பணம் செலுத்தப்பட்ட பின்னர் ஒப்பந்தகாரர்கள் குறிப்பிட்ட கால திட்டத்தை செய்ய தவறினால் செலுத்தப்பட்ட பணம் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் இருந்து அறவிடப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

## எம்.பியின் கடைசி அறிவுரை

(செல்வா)

பொது மக்களின் பாதுகாப்புக்காக இருக்கும் பொலிஸார் தங்கள் கடமையை உணர்ந்து செயற்பட வேண்டும். கண்மூடித்தனமாக ஆயுதம் பாவிப்பதை தவிர்க்க வேண்டும்.அவ்வாறு இல்லாதுவிடின் மக்கள் அப்பகுதியை விட்டு வெளியேற வேண்டும். அல்லது பொலிஸார் அப்பகுதியை விட்டு வெளியேற வேண்டும்.என்று கடந்த ஞாயிறு இரவு ஏறாவூரில் நிகழ்ந்த எறிகணைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சவுந்தரநாயகம் ஏறாவூர் பொலிஸ் அதிகாரியை சந்தித்து பேசியுள்ளார்.

## ஜே.வி.பி அங்கம் வகிக்காது

(நமது நிருபர்)

நோர்வே செல்லும் ஐவர் கொண்ட பாராளுமன்ற குழுவில் ஜே.வி.பி.அங்கம் வகிக்காது என தெரிவித்துள்ளது.நோர்வே செல்லும் குழுவில் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினரான நந்தன குணசேகர தெரிவு செய்யப் பட்ட போதும் நோர்வே செல்ல தாங்கள் விரும்பவில்லை என ஜே.வி.பி.தெரிவித்துள்ளது.

## அரசுக்கெதிராக ..............................

வருவதாகவும் கூறினார்.

பொதுத்தேர்தல் முடிந்து ஒரு. மாதமாகிய நிலையிலும் பாராளுமன்றம் கூட்டப்படவில்லை. மேலும் அதிக எண்ணிக்கையான அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. என லொக்கு பண்டாரா தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் தலை தூக்கியுள்ள இவ்வேளை அவை குறித்து பாராளுமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது என்றும் தெரிவித்தார்.

## யாழ் கொழும்பு விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

(யாழ்நிருபர்)

கொழும்புக்கும் பலாலிக்கும் இடையில் பயணிகள் விமான சேவையை ஆரம்பிப்பதற்கான. முன்னோடி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த சேவையை ஆரம்பிக்கும் வகையில் யாழ் நகரில் சிவில் நிர்வாக அலுவலகத்தில் இயங்கி வந்த விமானப் படையின் ஹெலிடூரால் நிறுவனத்தின் அலுவலகம் மீண்டும் திறக்கப்பட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இவற்றை ஆராயும் முகமாக நேற்று முன்தினம் விமானப் படை குழுவினர் இப் பகுதிக்கு வந்து நிலைமைகளை ஆராய்ந்ததாக கூறப்படுகின்றது.

இவ்வருட முற்பகுதியில் விமான சேவை ஆரம்பிக்கப்பட்ட போதும் கடந்த மார்ச் மாதம் அனுராதபுரப் பகுதியில் வைத்து அன்ரநோவ் விமானம் வெடித்து சிதறிய சம்பவத்தை தொடர்ந்து யாழ் விமான சேவை முற்றாக இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்க்கது.

## மஹா கும்பாபிஷேகம்!

(பாண்டிருப்பு கேதீஸ்)

நாவிதன் வெளி ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆயலகுடமுழுக்குப் பெருஞ்சாந்தியும் மஹா கும்பாபிஷேகமும் இம்மாதம் 04.11.2000 அன்று விஷேட கிரிகைகளுடன் ஆரம்பமாகி 07.11.2000அன்று காலை 8.00மணி தொடக்கம் மாலை 6.00மணி வரை எண்ணெயக்காப்பு வைபவம் நடைபெற்று 08.11.2000 புதன் கிழமை குடமுழுக்கு பெருஞ் சாந்தியும் மஹா கும்பாபி ஷேகமும் நடைபெறும் 29.11.2000 புதன் கிழமை மஹா கும்பாபிஷேகத்துடன் கிரிகைகள் நிறைவு பெறும்.இக் கிரிகைகள் அனைத்தும் வை.இ.எஸ்.காந்தன் குருக்கள் தலைமையில் நடை பெறும்.

## தேடுதலில் நால்வர் கைது

(செல்வா)

நேற்று முன் தினம் வாழைச்சேனை துறைமுக இராணுவத்தினர் வாழைச்சேனை வட்டயன் நாசிவன்தீவு பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போது அப்பகுதியை சேர்ந்த நல்வரை கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

வட்டயன் நாசிவன்தீவை சேர்ந்த சீனித்தம்பி-யோகேஸ்வரன், கந்தவன்-யோகராசா,இரஞ்சன்-இலங்கேஸ்வரன்,கந்தையா-கந்தசாமி ஆகியோரே இராணுவத்தினரால் கைது செய்து தடுத்து வைத்திருப்பவர்களாவர்.

## எதிர்ப்பு உணர்வுகளை காட்டுவது இனவாதம் என அர்த்தப்படாது!

### டி.சிவராம்

(அரியம்)

இன ரீதியாக தமிழருக்கு திட்டவட்டமான ஆக்கிரமிப்பு படுகொலைகள் இடம் பெறும் போது அக்கொலைகளுக்கும் அட்டூழியங்களுக்கும் எதிராக எதிர்ப்பை காட்டுவது இனவாதம் இல்லை என பத்திரிக்கைபாளர் டி. சிவராம் குறிப்பிட்டார்.

நேற்று பிற்பகல் நாவலடியில் தமிழர் மறு மலர்ச்சிக் கழகத்தின் கலந்துரையாடலின் போது கருத்துரையாற்றிய டி.சிவராம் தொடர்ந்து பேசுகையில்

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்கள் மறைந்து பயந்து சுயமரியாதை இல்லாத இனமாக வாழ வேண்டும் என்பதை கடந்த பத்து வருடங்களாக இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு சில காரியங்களை செய்து வருகின்றது.இவற்றிற்கு எமது மக்கள் துணை போகாமல் விழிப்புடன்வாழ வேண்டும் என்பதற்காகவே தமிழர் மறுமலர்ச்சிகழகம் ஆரம்பிக்கப்பட்டது.நாம் தேர்தலில் போட்டியிடுவதோ பாராளுமன்றம் செல்வதோ எமது நோக்கம் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

கிழக்கு பல்கலைக் கழக விரிவுரையாளர் கெனடி தமது உரையில் கிழக்கு மாகாணத்தில் நடக்கும் அட்டூழியங்கள் வெளி உலகிற்கு செல்வதில்லை தடியெடுத்தவன் தண்டல்காறன் என்ற நிலை தான் கிழக்கு மாகாண தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

யாழ்பாணத்தில் ஒன்று நடந்தால் சர்வதேசத்தில் 10 நிமிடத்தில் தெரிந்து விடும் ஆனால் கிழக்கு மாகாணத்தில் ஒரு அட்டூழியம் இடம் பெற்றால் அதை தட்டிக் கேட்பதற்கோ வெகுஜனப் போராட்டங்கள் நடத்துவதற்கோ எவரும் முன் வருவதில்லை இந்த நிலை மாற வேண்டும் என்றார்.

கிழக்கு பல்கலைக் கழக விரிவுரையாளர் திருமதி வாசுக் பேசுகையில் 'பயம்' எம்முடன் வளர்க்கப்படுகிறது இதை நீக்க வேண்டும் தொடர்ந்து பயந்து

## உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் தலைவருக்கு 15 மாதச் சிறைத்தண்டனை

(நமது நிருபர்)

இடம்பெயர்ந்த தமிழ் கிராமவாசிகளை தம்பலகமம் கிராமத்தில் மீளக்குடியமர்த்துவதற்காக லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட ஒக்ஸ்பாம் நிறுவ்னம் கொடுத்த பணத்தை மோசடி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் திருகோணமலையில் இயங்கி வரும் ஸ்லீட் என்ற பெயரில் அழைக்கப்படும் இலங்கை இவான்ஜலிக்கல் சங்கம் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவரான ஜே.ஆர்.பி. டொனால்ட் ஜெயராஜன் ரபியல் என்பவருக்கு திருகோணமலை நீதிபதி திரு. பி.சுவர்ணராஜ் 15 மாத கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

ஒக்ஸ்பாம் நிறுவனத்தைச் சேர்ந்த வெளிநாட்டுப்பிரதிநிதி ஒருவர் ஸ்லீட் நிறுவனத்தின் நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்டு பொலிஸில் முறைப்பாடு செய்தார். அதனை அடுத்து திருகோணமலை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் மெண்டிஸ் விசாரணை நடத்தி ஸ்லீட் நிறுவனத்தின் தலைவர் மீது நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார்.

முதலாவது குற்றச்சாட்டு- ஏமாற்றியது. இரண்டாவது குற்றச்சாட்டுபணத்தினை நம்பிக்கைத்துரோகம் செய்தது. மூன்றாவது குற்றச்சாட்டு- மோசடி செய்த ஆவணங்களை வைத்திருந்தது

விசாரணையின் பின்னர் எதிரியை மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் குற்றவாளியாகக் கண்டு நீதிபதி தண்டனை வழங்கினார்.

ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் 15 மாத கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அதனை விட ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா ரூபா 1500 அபராதம் விதிக்கப்பட்டது. அபராதப்பணத்தைச் செலுத்தத் தவறினால் ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் மேலும் தலா 3 மாதக் கடுங்காவல் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

சிறைத் தண்டனை அனைத்தையும் ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டதால் எதிரி மொத்தமாக 15 மாத கடுங்காவல் சிறைத்தண்டனை அனுபவிப்பார் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

## யாழ் கொக்குவில்லில் தேடுதல் நான்கு இளைஞர்கள் தடுத்து வைப்பு

(யாழ் நிருபர்)

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் நேற்றுக் காலை படையினர் நடத்திய சுற்றிவளைப்பு தேடுதலின் போது யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் உட்பட ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் பல்கலைக் கழக மாணவர்கள் இருவரும் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.ஏனைய நான்கு இளைஞர்களும் சந்தேகத்தின் பேரில் ஊரேழு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ் பல்கலைக் கழக கலைப் பீடத்தை சேர்ந்த எஸ்.ரவீந்திரன்,(முல்லைத்தீவு).வணிக முகாமைத்துவ பீடத்தை சேர்ந்த எம்.கஜேந்திரன் ஆகியோரே கைது செய்யப்பட்டு விடுதலை பெற்ற மாணவர்களாவர்.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிக்கேஷன் நிறுவனத்தினால் சஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.